₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 Issue 12 December 2025

*"...நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்" யோவான் 8:12.*

# ஒளி

## கிறிஸ்துவின் ஒளி உங்கள் வழியாக இன்னும் அதிகமாக பிரகாசிக்கட்டும்



இவைகளிலும் அதிகமாய்
யோவான்.21:15

# ஆரம்ப வரிகள்...



## ஒளியேற்றப்பட்டது பிறரை ஒளிரச்செய்யவே

கிறிஸ்துமஸ் நம் வாழ்வில் ஒருவிதமான மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையைக் கொடுக்கிறது. கிறிஸ்துமஸ் நாட்களில் காணப்படும் வண்ண விளக்குகள் மற்றும் அலங்காரங்கள் இயேசு இவ்வுலகிற்கு ஒளியாய் வந்தார் என்பதை நினைப்பூட்டுகிறது (யோ.8:12). அதோடு அவரின் ஒளியைப் பெற்ற நாம், நமது செயல்களின் மூலமாய் பிறர் வாழ்வில் வெளிச்சம் வீசிட தேவன் நம்மை அழைக்கிறார் (மத்.5:14-16). அநேக விசுவாசிகள் தாங்கள் பணிபுரியும் துறைகளில் (ஆசிரியர்கள், அரசாங்க அதிகாரிகள், விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள்) தங்களுக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக திகழுகின்றனர். அந்த பட்டியலில் புதிதாக இணைந்தவர்தான் ஜெமிமா ஜெசிகா ரோட்ரிக்ஸ் ஆவார். செப்டம்பர் 5, 2000ஆம் ஆண்டு மும்பையில் பிறந்த இவர், ஜூனியர் கிரிக்கெட் பயிற்சியாளரான தனது தகப்பனாரிடம் கிரிக்கெட் பயிற்சிப்பெற்று, பிற விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கியதோடு ஹாக்கியில் மாநில அளவில் பங்குபெற்றுள்ளார். மும்பை அணியின் சார்பாக டெல்லி அணிக்கு விளையாடி 2022இல் ஆசிய போட்டியில் தங்கமும், காமன்வெல்த் போட்டிகளில் வெள்ளியையும் வென்றார்.

2024ஆம் ஆண்டு அவரின் தகப்பனார் மதம் சார்ந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டிற்கு உள்ளானதால் ஜெமிமா அணியைவிட்டு விலக்கப்பட்டார். மேலும் இணையதளத்தில் மிக மோசமாகவும், ஆபாசமாகவும் சித்தரிக்கப்பட்டார். இச்சம்பவங்கள் அவரை ஆழந்த மன உளைச்சலுக்கு தள்ளியது. அதன் மத்தியிலும் சிறந்த வீராங்கனையாக உருவாகி 2025இல் மகளிருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பையின் அரை இறுதியில் சதம் அடித்து இறுதிச் சுற்றுக்குச் செல்ல பங்களித்தார். இந்த சாதனை ஜெபத்தால் மட்டுமே சாத்தியமானது என்று அனைவரின் முன்பும் சாட்சி பகிர்ந்தார். போட்டியின் இறுதியில் நடந்த பரிசளிக்கும் விழாவில் அவர் தனது அணி, பயிற்சியாளர்கள் மற்றும் நண்பர்களுக்கு நன்றி கூறும் முன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி கூறி தேவனை மகிமைப்படுத்தினார். தான் மிகவும் சோர்ந்துபோனபோது (யாத்.14:14) **கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்** என்ற வசனம் தனக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தது என்றும் சங்.30:5இன் படி **தேவன் தன் அழுகையை களிப்பாக மாற்றினார்** என்றும் உலகம் அறிய கண்ணீரோடு சாட்சி பகிந்தார்.

இருள் நிறைந்த வாழ்வில் கிறிஸ்துவின் ஒளி ஜெமிமா போன்றோரின் வாழ்வில் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். தேவன் நம்மை இந்த உலகிற்கு ஒளியாய் ஒளிர்வதற்கு அழைத்ததுபோல, ஒவ்வொரு விசுவாசியும் எப்பணியில் இருந்தாலும், எவ்விடத்தில் இருந்தாலும் தேவனுக்காக ஒளிர வேண்டும். சவால்கள் நம்மை நெருக்கும்போது, நம் அமைதி சீர்குலைக்கப்படும்போது இந்த உலகிற்கு வந்த உன்னத ஒளி இன்றும் நம்மை வழிநடத்துகிறது என்றும், பெலப்படுத்துகிறது என்றும் நிச்சயித்து உறுதிகொண்டிடுவோம். இந்த மகிழ்ச்சியான காலங்களை கொண்டாடும் நாம், மீண்டும் தேவனது உன்னத ஒளியை பிரதிபலிக்கும் அர்ப்பணத்திலே உறுதியும், மனமகிழ்ச்சியும் மற்றும் தைரியமும் கொண்டிடுவோம். இவைகள் கிறிஸ்துவில் இருக்கும் நித்திய வாழ்வு மற்றும் நம்பிக்கையை நம்மை சார்ந்தவர்கள் கண்டுணர்வதற்கு ஏதுவாக இருக்கும்.

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது"
*1யோவான் 1:5.*

**இந்த இருண்ட உலகத்திற்கு ஒரே நம்பிக்கை மற்றும் பிரகாசமான ஒளி இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி மட்டுமே.**
*– டாலின் H ஓக்ஸ்*

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" *2 கொரி. 4:6.*

**தேவன் எல்லாவற்றையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்போது, அவரின் திட்டத்தில் நீங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிறீர்கள் என்பதை உணர்வீர்கள்.** *– A W டோஜர்*

"முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்"
*எபேசியர் 5:8.*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது ஊழியம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்தி பணி இயக்கம். இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்வதே இதன் பிரதானப் பணி.

இந்திய திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப் பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

இணைந்திடுங்கள்.
பிறரை அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


**அறைகூவல்**
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

பொதுச்செயலாளர்: விஜய் பிரசன்னா ஐசக்
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.48/-
ஆயுள் சந்தா ரூ.500/-



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...

*“நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந் திருப்பான்” என்றார். (யோவான் 8:12)*

நமது இருளுக்குள் நித்திய ஒளி உட்பிரவேசித்ததை கிறிஸ்துவின் பிறப்பு பறைசாற்றுகிறது. இஃது கவித்துவம் நிறைந்த உணர்ச்சி வாக்கியம் அன்று, வாழ்வை மறுமலர்ச்சியடையச் செய்யும் உண்மைக்கூற்றாகும். புனித அகஸ்டின் இவ்வாறு நினைவுபடுத்துகிறார், ‘எங்களது இதயம் உம்மிலே அமைதி கொள்ளும் வரை அமைதியற்றதாகவே காணப்படுகிறது’. இயேசு கிறிஸ்துவின் வருகை நமது அமைதியின்மை யிலே கடந்து செல்லும் ஒளிக்கீற்றைப் போன்றதன்று அஃது என்றும் விலகாத நித்திய பேரொளியால் எங்கும் வியாபித் திருக்கிறது (யோ. 1:9,14).

## 1 இருளை ஊடுருவி வெளிப்பாட்டையும், மீட்பையும் அருளும் ‘ஒளி’

மெய் ஒளியான கிறிஸ்து முதலாவது தன்னை வெளிப்படுத்தி, பின்பு நமக்கு மீட்பை அருளுகிறார். அவர் நம்மிலே மறைந்திருக்கும் பயம், பெருமை, பேராசை மற்றும் அவமானம் போன்ற வெளித்தெரியா நிழல் காரியங்களை வெளிப்படுத்தி பின்பாக குணமாக்கும் கிருபையை அருளுகிறார். இருள் வெறுமையான செயலற்ற காரணி அன்று அது செயல்திறன் கொண்ட அடிமைத்தனத்தின் காரணி என வேத வார்த்தைகள் சுட்டிக்காட்டுகிறது. “அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ள வில்லை” (யோ.1:5). இந்த நம்பிக்கையைப் பற்றி ஏசாயா தீர்க்க தரிசனமாக உரைத் திருப்பது யாதெனில், “இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்” (ஏசா.9:2).

இந்திய தேசத்திலே இந்த வெளிப்பாடானது சாதீயத்தை மையம்கொண்ட மனிதத் தன்மையற்ற செயல்கள், பாலின துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல், வறுமை, ஆவிக்குரிய குழப்பங்கள் போன்றவைகளிலே வலிமை நிறைந்து பேசுகிறது. **சி.எஸ். லூயிஸ் என்பவர் சூரியன் உதிப்பதை நம்புவதைப்போல் கிறிஸ்தவத்தையும் நம்புகிறேன், நான் அதை பார்ப்பதோடு மட்டுமல்ல அதன் மூலம் அனைத்து காரியங்களையும் அறிகிறேன்.** கிறிஸ்து நமது உள்ளிந் திரியங்களை வெளிக்கொணர்வது, நம்மை வெட்கப்படுத்தும்படிக்கு அல்ல மாறாக நம்மை உயர்த்துவதற்கும், சீர்ப்படுத்துவதற்கும் மற்றும் மீண்டும் புது சிருஷ்டியாய் உருவாக்குவதற்குமே ஆகும் (சங். 107:14, லூக். 4:18).

இவற்றிலிருந்து உருப்பெறும் இந்த ஊழிய அழைப்பானது எளிமையானது ஆனால் ஆழமானது. இது இருள் ஆதிக்கம் நிறைந்த பகுதியிலிருந்து

தொடங்கப்பட வேண்டும். மக்களின் வலியைக் கேட்டறிந்து கருணையுடன் பதிலளித்து, செயலாலும், வார்த்தையாலும் அவர்களை கிறிஸ்துவின் வல்லமையின் அருகாமைக்கு மெதுவாக வழிநடத்துவதின் மூலம் இதனை செய்ய முடியும்.

## 2 பராமரிப்பிலிருந்து முன்களப் பணிக்கு அடையாளத்தோடுக் கூடிய செயலாக்கத்திற்கு நம்மை அழைக்கும் உன்னத 'ஒளி'

பெறுகின்ற ஒளியை பிரகாசிக்கச் செய்வது அவசியமாகிறது. "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்... உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' (மத்.5:14-16) என்பதிலே இயேசு கிறிஸ்து, ஒளியைப் பெறுவதும், பிரகாசிக்க செய்வதும் பிரிக்க முடியாதவைகள் என்பதை குறிப்பிடுகின்றார். ஒளியானது, திட்டங்கள் மற்றும் கட்டிடங்களின் வளர்ச்சியினால் மறைக்கப்பட வேண்டியதன்று. விசுவாசமுள்ள சமுதாயங்கள் தங்களைப் பேணி பாதுகாப்பதிலே அதிக கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றபோது, தேசம் இருளிலே மூழ்கி நீடிக்கும் அபாயம் ஏற்படும்.

இன்றைய விசுவாசிகள் தங்களுடைய சௌகரியமான (சுகபோக) வளையத்தை விட்டு வெளியேறி, ஊழியர்களை அனுப்புகிறவர்களாகவும், சீடர்களை உருவாக்குகிறவர்களாகவும் மற்றும் முன்களப் பணியாளர்களாகவும் உருமாறவேண்டும், இஃதே இத்தேசத்தின் இன்றைய அவசரத் தேவை. இதன் உள்ளான புரிதல், கலாச்சாரம் மற்றும் சூழலுக்கேற்ற திருச்சபைகளை சுவிசேஷம் சென்றடையாத மாவட்டங்களில் நிறுவுதல், பழங்குடி மற்றும் தலித் சமூக விசுவாசிகளிடையே வேத வசன உபயோகத்தை முதன்மைப்படுத்துதல் மற்றும் திறமைமிக்க திருச்சபைத் தலைவர்களை உருவாக்குதல், இருள் (தீமை/பிரச்சனை) நிறைந்த பகுதிகளில் ஊழியங்களில் தேவ அன்பையும், இரக்கத்தையும் மையப்படுத்துதல் ஆகும். மிஷனெரி ஊழியம், மற்ற ஊழியங்களுக்கு ஓர் மாற்று அன்று, இஃது கிறிஸ்துவை அறிந்து, தெரிந்து அவரை உள்ளத்தில் ஏற்பவரின் இயல்பான வெளிப்பாடாகும்.

## 3 சௌகரியமான (சுகபோக) வாழ்வின் எல்லைகளை சவாலுக்குட்படுத்தும் அவதாரம், தைரியம், கருணை என்னும் உன்னத 'ஒளி'

இயேசு கிறிஸ்து மாம்சமாகி, நம்மை ஒளிரச் செய்ய நமது இருள் வாழ்விற்குள் பிரவேசித்தார் (யோ.1:14). அவரது வெளிப்பாடு நம்மை சுகபோக வாழ்வை விடுத்து தெய்வீகத்திற்கும், மனமுடைந்தவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்களின் அருகாமைக்கும் அழைக்கிறது. பொன்ஹோஃபர் நமக்கு இவ்வாறு நினைவூட்டுகிறார், 'கிறிஸ்து ஒரு மனிதனை அழைக்கும்போது, அவன் வந்து (சுயத்திற்கு) மரிக்கும்படி அவனை கேட்கிறார்'. இந்தியாவில் இதனுடைய கூற்று, கடினமான/எதிர்ப்புகள் நிறைந்த பணித்தளங்களில் ஊழியம் செய்வதும், பல்துறை நிபுணர்கள் ஏழை எளியவர்களை மேம்படுத்துவதற்கு தங்களது திறமைகளை செலவிடுவதுமேயாகும்.

உண்மையான சாட்சி மனதைரியத்துடன் (1பேதுரு 3:15) இரக்கத்தையும் (யாக்.1:27) இணைக்கிறது. நீதி, இரக்கம், தியாகம்

மற்றும் தேவ பிரசன்னம் மூலமாக தேவனின் சுவிசேஷம் வார்த்தைகளினால் அறிவிக்கப்படுமுன் செயல்களினால் கண்டுணரப்படவேண்டும்.

## 4 இந்தியாவின் பன்முகத்தன்மைக்கான தரிசனத்துடன் நம்மை இணைக்கும் 'ஒளி'

கிறிஸ்துவின் ஒளியானது பன்முகத் தன்மைக்கு மதிப்பளிக்கிறது; மேலும் அதை மாற்றமடையச் செய்கிறது. வெளிப்படுத்தின விசேஷம், "சகல ஜாதி களிலும், கோத்திரங்களிலும், பாஷைக் காரர்களிலும்" (வெளி. 7:9) இருந்து திரட்டப்பட்ட ஒரு ஆராதனைக்கான தரிசனத்தை வழங்குகிறது. இந்தியாவின் பன்முக கலாச்சாரம், மொழி மற்றும் பாரம்பரியங்கள் யாவும் நற்செய்திக்கு எதிரானது அல்ல, யாவும் அவரது அழகு மகுடத்தின் முத்துக்களாகும்.

சுவிசேஷம் ஒவ்வவொரு மொழியிலும், இசையிலும், வழிபாட்டு முறையிலும், கலாச்சார வடிவிலும் வெளிப்படுத்தப் படவேண்டும். இந்தி, தெலுங்கு, தமிழ், பெங்காளி மற்றும் பழங்குடியின விசுவாசிகள் ஒன்றாக கிறிஸ்துவை பிரதிபலிக்கும்போது, எந்தவொரு சமூக-அரசியல் காரணிகளாலும் விளங்கிக்கொள்ள முடியாத சாட்சிகளாக உயர்ந்து நிற்கிறது.

## 5 நமது குழப்பமான தருணங்களில் வெற்றிக்கொள்ளும் நம்பிக்கையின் 'ஒளி'

ஏரோதுவின் கொடூரங்களாலும், மதவாத விரோதங்களாலும் மற்றும் மரணங் களாலும் **கிறிஸ்துவின் ஒளியை** அணைத் திட இயலவில்லை. "...இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" (யோ.1:5). இந்தியாவில் பிரிவினை, பதட்டம், நிச்சயமின்மை அத்தனையும் அதிகரிக்கும் இந்த காலக்கட்டத்தில் நாம் கொண்டிருக்கும் இந்த நம்பிக்கை சாதாரணமானது அன்று. **வாட்ச்மேன்** என்ற தேவ மனிதர் அழகாகச் சொல்கிறார்: **ஒளிர்வதே நம் பணி; இருளை விரட்டுவது தேவனின் பணி.**

இது நம்மை நமது சாட்சியுள்ள வாழ்வில் உறுதிப்பட நிற்கவும், தவறிய இடங்களில் மனந்திரும்பவும், கண்களுக்குப் புலப் படாத ஆசீர்வாதங்களைப் பெற்றிடவும், உறுதியான ஜெபத்திலே தரித்துநிற்கவும் அழைக்கிறது. நமது நம்பிக்கை உணர்ச்சிப்பெருக்கிலோ, அல்லது எண்ணிக்கையிலோ அல்ல, அது நிலை மாறாத கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மைத்துவத்திலும், நித்திய ஆளுமை யிலும் உள்ளது.

## 6 நம்மால் உருவாக்க முடியாத ஒளியைப் பிரதிபலிப்பதே மிஷனெரி கிறிஸ்துமஸ் ஆகும்

ஒளியை உருவாக்குவது நம்மால் இயலாத காரியம். தேவன் கூறுகிறார், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோ.15:5). நமது பிரகாசம், ஒளியை உள்வாங்கி ஜொலித்திடும் ரேடியம் போலவே உள்ளது. தொடர்ந்து நாம் தேவ பிரசன்னத்தில் நிலைகொண்டிருக்கும்போது மட்டுமே பிரகாசித்திட முடியும் (ஏசா.60:1).

ஏமி கார்மைக்கேல் மற்றும் கொர்ரி டென் பூம் இருவரும் சாட்சியமளித்தது என்னவெனில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்விலிருந்தே நிலையான கனி நிறைந்த வாழ்வு தொடங்குகிறது. மிஷனெரி ஊழியம் தேவன் மட்டுமே பார்க்கும்படியான ஜெபம், வேத

தியானம் மற்றும் பரிசுத்த வாழ்விலிருந்து துவங்குகிறது. தேவனது ஒளியை உள்வாங்கும்போது, ஒவ்வொரு கிராமமும், பழங்குடி இனமும், தலைமுறைகளும் உலகிற்கு வந்த அந்த உன்னத ஒளியை அறிந்துகொள்வதற்கு நாம் தேவனது சுவிசேஷத்தை பறைசாற்றுபவர்களாக, நீதி செய்பவர்களாக, சுகமளிப்பவர்களாக மற்றும் போதிப்பவர்களாக உருமாறுகிறோம் (ஏசா.49:6, ஆபகூக் 2:14).

இந்தியா தனது விளக்குளை ஏற்றி நம்பிக்கையைக் கொண்டாடும் வேளையில் தாகூரின் ஏக்கம் நமது தேசத்திற்கான ஜெபமாகிறது: ‘அந்த பிரலோகத்தின் சுதந்திரத்தில், என் தந்தையே, என் தேசம் விழித்தெழட்டும்’. அவர், உண்மையின் விழிப்புணர்வுடன் மற்றும் பயத்திலிருந்து விடுதலைப் பெற்ற ஒரு ஜனத்தை தூர தரிசனமாக கண்டார். கிறிஸ்துமஸ் இந்த விழிப்புணர்வும், விடுதலையும், உண்மை என பறைசாற்றுகிறது – ஏனெனில் ஒளி வந்துவிட்டது.

இந்த உலகத்தின் உண்மையான ஒளி இயேசு கிறிஸ்து ஒருவரே. இவ்வொளி, ஏற்றப்படும் தீபங்கள், தாகூரின் கவிதை வரிகளின் ஏக்கங்கள் மற்றும் நம்பிக்கையின் ஆதாரத்தை நிறைவேற்றுகிறது. கல்வியால் குணமாக்க முடியாத, அரசியலால் அகற்ற முடியாத மற்றும் சடங்குகளால் சுத்திகரிக்க முடியாத இருளை தேவனது ஒளி அகற்றுகிறது.

நாம் அந்த உண்மை ஒளியை உருவாக்க இயலாது. மாறாக பிரதிபலிக்க முடியும். கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூறும் நாட்களிலே, அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும், குடும்பங்கள், பணியிடங்கள், கிராமங்கள், நகரங்கள் மற்றும் அவரை அறிந்திடாத மக்கள் மத்தியிலே அந்த உன்னத ஒளியை பிரதிபலிப்பவர்களாக உருமாற்றம் கொள்வோம். நமது இதயங்களின் ஏக்கம், தேசத்தின் தேடல், வேதத்தின் வாக்குத்தத்தம் யாவும் ஒரே நிலையில் இணைந்து நிற்கட்டும்.

இந்த ஆண்டின் இறுதிக்கட்டத்தில் நாங்கள் நிற்கும் வேளையில், எங்கள் இதயங்கள் பயபக்தியுள்ள நன்றி உணர்வில் நிலைக்கொண்டுள்ளது. கடந்த காலத்தை கண்ணோக்கிப் பார்க்கும்போது எங்களது கண்ணீர், சோதனைகள், பரீட்சைகள் மற்றும் வெற்றிகளிலே, நமது இயக்கத்தின்மீது தேவனது உண்மைத்துவமும், பாதுகாப்பும் மற்றும் பரிபாலனமும் ஒளிர்ந்து மிளிர்வதைக் காண்கிறோம். அவரது கிருபையின் கரம் எங்களை வழிநடத்திக்கொண்டிருக்கிறது. **எபினேசர்** என்பதே எமது சாட்சியாக என்றுமுள்ளது. “இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்” (1சாமு. 7:12).

சுவிசேஷத்தின் அன்பு உடன் பங்காளர்களே, உங்களது அசைக்கமுடியாத ஜெபங்களுக்கும், தியாகமான ஈகைக்கும், நிலைத்த ஆதரவிற்கும் எங்களது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவிக்கிறோம். கடினமான சூழ்நிலைகளினூடே கடந்து செல்லும் நமது மிஷனெரிகளுக்கு உங்களது உண்மையான அன்பு அவர்களைத் தாங்கி நிற்கும் முதுகெலும்புபோல இருக்கிறது. சந்திக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாக்களும், வீடுகளும், மறுமலர்ச்சிப்பெற்ற ஒவ்வொரு கிராமங்களும் உங்களது விசுவாசத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கனிகளாக நிலைகொண்டிருக்கின்றன.


தற்போது இந்த கிறிஸ்துமஸ் நமது இருள் வாழ்விற்குள் உட்பிரவேசித்த உலகத்தின் மெய் ஒளியானவரிடத்திற்கு நம்மை கிட்டிச்சேர்க்கிறது. அவரது பிரசன்னம் நமது இதயங்களையும், வீடுகளையும் நிரப்பட்டும். அவரது சமாதானம் உங்களைக் காக்கட்டும், அவரது சந்தோஷம் உங்களை பெலப்படுத்தட்டும்.

நமது தேசத்தின் பல பகுதிகளில் ஊழியம் செய்து வருகின்ற நமது மிஷனெரிகளின் சார்பாக, உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் எங்கள் உளப்பூர்வமான ஜெபமிகு கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2026ஆம் ஆண்டிற்குள் நாம் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில் கிறிஸ்துவின் மாறாத ஒளி உங்களை வழிநடத்துவதோடு மட்டுமல்லாமல் அவருடைய பணியில் உங்களை முழுமையான கீழ்ப்படிதலுக்கு உட்படுத்தட்டும். மேலும் நமது மிஷனெரிகளை தங்களது விலையேறப்பெற்ற ஜெபங்களினால் தொடர்ந்து தாங்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பகைமையும், எதிர்ப்பும் நிறைந்த பகுதிகளில் கூட கர்த்தர் சமாதானத்தையும், கனி நிறைந்த ஊழியத்தையும் அருளி தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவாராக!

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி ... உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்" (ஏசா.58:11).

***"உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான்.1:9).***

கிறிஸ்துவின் பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI - A/c No. 602701216912** - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI - A/c No. 10402752621** - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank - A/c No. 406157474** - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு**
**QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# இருளிலிருந்து

# அவருடைய அற்புதமான ஒளிக்குள்

“என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம்” என்று மக்கள் சொல்வதை நாம் சில சமயங்களில் கேட்டிருப்போம். சில தேவ ஊழியர்களும், விசுவாசிகளும் கூட தங்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான வாழ்க்கையை வலியுறுத்த இதுபோன்ற நம்பிக்கையான அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். மேலோட்டமாகப் பார்த்தால், நாம் கண்ணியமாகவும், தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் தோன்றலாம். ஆனால் நம் இதயத்தை ஆழமாகப் பார்த்தால் அதில் இன்னும் இருள் நீடிக்கிற இரகசிய இடங்கள் மற்றும் அடிக்கடி நம்மால் மறைக்கப்பட்ட மூலைகளைக் கண்டுபிடிப்போம்.

நம் வாழ்க்கைப் புத்தகத்தில் மற்றவர்கள் படிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்காத பக்கங்கள் உள்ளன. நம் இதயங்களின் இருண்ட மூலை களில் எத்தனை வேதனையான நினைவுகள், தோல்விகள் மற்றும் ஏமாற்றங்கள் மறைக்கப்பட்டுள்ளன? நம் அன்புக்குரியவர்களிடமிருந்தும், சில சமயங்களில் ஆண்டவரிடமிருந்தும் கூட எத்தனை வெட்கக்கேடான அல்லது பாவமான இரகசியங்களை நாம் மறைக்கிறோம்? உன்னதமான தேவனுடைய வார்த்தை, அதன் ஒளி நம்மீது பிரகாசிக்கும் வரை இந்த நிழலான இடங்கள் பற்றி நமக்குத் தெரிவதில்லை. அவ்வாறு நிகழும்போது அந்த ஆவிக்குரிய தன்மைகளற்ற பழக்கவழக்கங்கள் அல்லது அணுகுமுறைகளை வேரோடு பிடுங்குவது கடினம் என்பதை நாம் காண்கிறோம்.

சிதைந்துபோகும் மதிப்புகள் மற்றும் தவறான முன்னுரிமைகள் நிறைந்த உலகில், மனிதகுலம் இன்னும் அதிகமாக இருளுக்குள் மூழ்குவதுபோல் தெரிகிறது. மாக்ஸ் லுகாடோ ஒருமுறை, இந்த உலகத்தை ஒரு அழகான குகையில் வாழும் ஒரு சமூகம் என்று விவரித்தார். இவர்கள் தேவன் அனுப்பிய ஒவ்வொரு ஒளியையும் ஒதுக்கி வைத்தார்கள். அதாவது தேவன் தமது கிருபையின் உடன்படிக்கையினால் இருளை அகற்றி, ஒளியை பிரகாசிக்க அவரது தீர்க்கதரிசிகளையும், நீதிமான்களாகிய ஆண்களையும், பெண்களையும்



அனுப்பிக்கொண்டே இருந்தார். ஆனால் குகையில் இருந்த மக்கள் அவர்களை நிராகரித்தனர், துன்புறுத்தினர், அவர்களைக் கொன்றனர். இறுதியாக, ஒளியே இந்த இருளில் இறங்கியது. ஒளியில்லாமல் வளர்ச்சி, வழி மற்றும் தெளிவு இல்லை. தேவனின் ஒளி உண்மை, பரிசுத்தம் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் குறிக்கிறது. இருள் பாவத்தையும், தேவனிடமிருந்து நமக்குள்ள பிரிவையும், அறியாமை யையும் குறிக்கிறது.

இயேசு கிறிஸ்து உலகிற்கு ஒளியைக் கொண்டுவரவில்லை. அவரே ஒளியாக நம் ஆவிக்குரிய வாழ்வை ஒளியேற்ற வந்தார். உலகத்தின் ஒளியாகிய இயேசு, பாவத்தாலும், அறியாமையாலும் மறைக்கப்பட்ட இவ்வுலகத்திற்குள் நுழைந்து மக்கள் தங்கள் குருட்டுத் தன்மையிலிருந்து வெளியேறி, **தம்முடைய சத்தியத்தில் நடக்கும்படி அழைக்கப்படுகிறோம்.** ஆனாலும் ஜனங்கள் மனமற்று இருந்தார்கள். யோவான் 1:11இல் “அவர் தமக்குச் சொந்த மானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்று கூறுகிறார். உண்மையான ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது, ஆனால் இருளில் வாழும் ஜனங்கள் அதை புரிந்துகொள்ளவில்லை.

இயேசு சொன்ன ‘**நானே**’ என்ற உன்னத கூற்றுகளை அப்போஸ்தலன் யோவான் தனது நற்செய்தியில் ஏழு இடங்களில் பதிவு செய்கிறார். அவற்றில் யோவான் 8:12இல் இயேசு, “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்”. ஜான் ஸ்டாட், யோவானின் கடிதங்கள் பற்றிய தனது விளக்கவுரையில், இந்த ஒளியை தேவனின் வெளிப்பாட்டுடன் இணைக்கிறார்.

‘தேவன் ஒளியாய் இருக்கிறார்’ என்று இயேசு பிரதானமாய் கூறிய கருத்தைவிட விரிவானது எதுவுமில்லை. ஏனெனில் பிரகாசிக்கும் ஒளியானது தேவனுடைய இயல்பின் வெளிப்பாடு. மேலும் இந்த வெளிப்பாடு பரிபூரண பரிசுத்தம் மற்றும் சொல்ல முடியாத மகத்துவம் கொண்டது.

கூடாரப் பண்டிகையின்போது இயேசு இந்த வார்த்தைகளைக் கூறுகையில் அவர் ஆலய முற்றத்தில் நின்றார். வனாந்தரத்தில் தம் ஜனங்களை வழி நடத்திய அவரது பிரசன்னத்தைக் குறிக்கும் பெரிய விளக்குகள் அவரைச் சுற்றி எரிந்தன. அந்த பிரகாசமான சூழலில் இயேசு அவர்களை நோக்கி உங்கள் முன்னோர்களை வழிநடத்திய ஒளியை நீங்கள் காண்கிறீர்கள், அது நான்தான் என்று அறிவித்தார்.

இருளில் நம்மை வழிநடத்த இயேசு ஒளியாய் வருகிறார். குழப்பத்திலும், பாவத்திலும், வேதனையிலும் இருக்கும் நம்மை சந்தித்து, வாருங்கள், ‘என்னை பின்பற்றுங்கள்’ என்கிறார். குழப்பத்தி லிருந்து புரிதலுக்கும், பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், வேதனையிலிருந்து மகிமைக்கும் நான் உங்களை வழிநடத்துவேன்’ என்று கூறுகிறார். அவரின் பிரகாசத்திற்கு முன் எந்த ஒரு ஆழமான இருளும் இல்லை.

நாம் அவருடைய ஒளியிலே நிலைத்தி ருக்கும்போது குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட்டு, கிருபையால் புதுப்பிக்கப்பட்டு, அந்த **ஒளியை மற்றவர்களுக்குப் பிரதிபலிக்க அழைக்கப்படுகிறோம்.** மத்.5:14இல் ‘நீங்கள் உலகத்துக்கு

வெளிச்சமாயிருக்கிறீர்கள்' என்று இயேசு நமக்கு நினைவூட்டுகிறார். என்ன ஒரு அசாதாரண பாக்கியம்! நாம் ஆதாரம் அல்ல பிரதிபலிப்பு, அவரின் சுடரால் எரியும் விளக்குகள். நமது நற்செயல்கள், நமது நீதியான வாழ்க்கை மற்றும் சத்தியத்தின் மீதான நமது அன்பின் மூலம் நாம் அவருடைய ஒளியை இருண்ட உலகிற்குள் பிரகாசிச்சச் செய்து தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறோம்.

அனைத்து வெளிச்சத்திற்கும் மூல காரணமான கிறிஸ்துவுடன் அனுதினமும் நாம் நடக்கும்போது அவருடைய பெலத்திலிருந்தும், அவருடைய ஒளியிலிருந்தும் நம் வாழ்க்கை பிரகாசமாகவும், தெளிவாகவும் வளர்ந்து அவருடைய பரிசுத்தத்தின் அழகை பிரகாசிக்கச் செய்வோம்.

இறுதியாக, அவருடைய பிள்ளைகளாக இருக்கும் பாக்கியம் பெற்ற நாம் **அவருடைய மகத்துவத்தை அறிவிக்க அழைக்கப்படுகிறோம்.** 1பேதுரு 2:9இல் அறிவிக்கிறதுபோல ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்''. இருளிலிருந்து நாம் அவருடைய அற்புதமான ஒளிக்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம். இது அந்த ஒளியை நம்மிடமே வைத்திருக்க அல்ல, மாறாக நம் ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும் பிரகாசிக்க அனுமதிக்க வேண்டும். நமக்குள் இருக்கும் அவருடைய ஒளி நம்மைச் சுற்றி காயப்பட்டுள்ளவர்களுக்கு அரவணைப்பைக் கொண்டு வரட்டும். இரட்சிப்பை இழந்தோரை பிதாவிடம் வழிநடத்தட்டும். நாம் அவரது ஒளியில் நடக்கும்போது அதை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல் **நான் உலகத்தின் ஒளி** என்று சொன்னவரின் உயிருள்ள சாட்சிகளாகவும் மாறுவோம்.

பெத்லகேமில் அந்த புனிதமான நள்ளிரவில், இருண்ட மற்றும் சோர்வடைந்த உலகம் தெய்வீக ஒளியால் ஊடுருவப்பட்டது. அது மேலே உள்ள நட்சத்திரங்களிலிருந்து வந்ததல்ல, மாறாக அது ஒரு தொட்டிலில் படுத்திருந்த தேவ குமாரனிலிருந்து வந்தது. **நான் உலகத்தின் ஒளி** என்று சொன்ன அதே இயேசு, மகிமையில் அல்ல. கந்தைத் துணிகளைப் போர்த்திக்கொண்டு நம் மனித குலத்திற்கு அமைதியாக வந்தார். இரவில் மேய்ப்பர்கள் வானத்தில் ஒளி பிரகாசிப்பதைக் கண்டார்கள். ஞானிகள் ஒரு பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்தார்கள். கிறிஸ்துவின் ஒளி இவ்வுலகத்திற்கு வந்ததற்கான காரணம் நம்மோடு வசிக்கவே. கிறிஸ்துவின் ஒளி தொலைவில் இல்லை அல்லது அடைய முடியாதது அல்ல என்பதை இந்த கிறிஸ்துமஸ் நமக்கு நினைவூட்டுகிறது. இந்த மகத்துவம் மற்றும் பிரகாசமுள்ள ஒளி நம் ஒவ்வொரு இருதயங்களிலும் பிரகாசிக்கட்டும். நாம் அவருடைய பிறப்பைக் கொண்டாடும்போது பெத்லகேமின் ஒளியைப் போற்றுவது மட்டுமல்லாமல், அதைப் பூரணமாய் பெற்றுக்கொள்வோம். இயேசுவின் ஒளி நம் வாழ்க்கையை நிரப்பி, நம்பிக்கைக்காகக் காத்திருக்கும் இவ்வுலகிற்கு நம் வழியாக பிரகாசிக்கட்டும்.

**திரு. பிரசாந்த குமார் கே.**

– ஓய்வுபெற்ற மிஷனெரி, FMPB

## வட இந்திய திருச்சபையின்

# பிரதம பேராயர் மற்றும் துணை பிரதம பேராயருடன் ஓர் சந்திப்பு



2025 நவம்பர் 6 அன்று வட இந்திய திருச்சபையின் பிரதம பேராயர் அருட்திரு. டாக்டர். பரிதோஷ் கன்னிங் மற்றும் CNI பொதுச் செயலாளர் அருட்திரு. அஜித் குமார் ஆகியோருடன் ஒரு முறையான சந்திப்பை நடத்தினேன். அவர்கள் இருவரும் திருச்சபை மற்றும் ஊழியங்களை கட்டியெழுப்புவதில் சிறந்த தொலைநோக்குப் பார்வையையும், ஆர்வத்தையும் கொண்டுள்ளனர். CNI இன் தலைமை அலுவலக பொறுப்பாளர்களாக இவர்கள் FMPB மற்றும் பிற மிஷனெரி இயக்கங்களுடன் இணைந்து வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்குவிக்க விரும்புகிறார்கள். கொல்கத்தாவின் பிஷப்பான அருட்திரு. கன்னிங், இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் CNIஇன் பிரதம பேராயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கொல்கத்தாவிலுள்ள ஆக்ஸ்போர்டு சகோதரத்துவ ஊழியத்தின் பாரம் பரியத்தில் வளர்ந்து வந்த இவர் விசுவாசம், சேவை, ஊழியருக்கான ஒழுக்கம் மற்றும் மிஷனெரி பணி ஆகியவற்றின் மீது உறுதியாக நிலைத்து நிற்கிறார்.



FMPBயின் மூலம் இந்தியா முழுவதும், சமுதாயத்தில் பின்தங்கிய பல இன மக்கள் மத்தியில் செய்து வரும் ஊழியங்கள் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்காக நாம் எடுக்கும் முயற்சிகளை அவர் பாராட்டினார். மேலும் நமது இயக்கத்தின் மிஷனெரிகளுடன் இணைந்து இந்தியா முழுவதும் செய்யப்படும் ஊழியங்களில் அவரும் பங்குக்கொள்ள ஆவலாக உள்ளார்.

FMPB மற்றும் CNI இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஒன்றுக்கொன்று நெருக்கமான கூட்டாண்மையைக் கொண்டிருக்க வேண்டுமென்று உரையாடினோம். CNI இல் உள்ள அனைத்து பேராயங்களுக்கும் மிஷனெரி தரிசனம் மற்றும் ஈடுபாட்டை கொண்டுவர FMPB பாடுபடும். மேலும் மிஷனெரி ஊழியத்தை விரிவுபடுத்துவதில் திருச்சபைகளுடன் இணைந்து செயல்படும். FMPB தலைவர்கள், CNI போதகர்கள் மற்றும் பிற மிஷனெரி இயக்கத் தலைவர்கள் உள்ளடக்கிய கிறிஸ்தவ தலைவர்கள் மாநாடுகளை தொடர்ந்து நடத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இது வட இந்திய ஆலயங்களை உறுதியுடனும் மற்றும் ஊழியத்தை கட்டியெழுப்ப வதிலும் உதவியாக இருக்கும்.

குஜராத் பேராயத்தின் துணை பிரதம பேராயர் Rt. Rev. Dr. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்களுடன் இணைந்து ஊழியத்தின் காரியங்களைக் குறித்து நீண்ட நேரம் பேசினேன். குஜராத்தில் நமது இயக்கத்தின் மூலம் செய்து வரும் ஊழியங்களின் வளர்ச்சிக்கு அவர் மிகுந்த உற்சாகத்தையும், ஆர்வத்தையும் காட்டுகின்றார். குஜராத்திலுள்ள 200க்கும் மேற்பட்ட நமது ஆலயங்களை குஜராத் CNI பேராயத்துடன் ஒருங்கிணைக்க FMPB ஏற்கனவே ஒரு பட்டியலை உருவாக்கியுள்ளது. குஜராத்தில் FMPB ஊழியத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டத்தில் குஜராத் CNI பேராயத்துடன் இணைந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள நாங்கள் பரிசீலித்து வருகிறோம். துணை பிரதம பேராயரும் இப்படிப்பட்ட மிஷன் கூட்டாண்மை மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டவர்.

நமது தேசத்தில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவர நமது இயக்கம் திருச்சபைகளுடன் இணைந்து ஜெபித்து, அர்ப்பணிப்புடன் பணி செய்கிறது.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர் – FMPB





**செயல்வீரர் கீதங்கள்**

**சிறிய பாடல் புத்தகம்**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் காலத்தால் அழியாத ஆதி மிஷனெரி தரிசனப் பாடல்களை உங்கள் இல்லங்களிலும் ஜெபக்குழுக்களிலும் பாடிட, மிஷனெரி தரிசனத்தை அனல் மூட்டி எழுப்பிட தொகுத்து வடிவமைக்கப்பட்டுள்ள சிறிய பாடல் புத்தகம் வெளிவந்துவிட்டது.

**நன்கொடை ரூபாய் 30/– மட்டுமே**

# பணித்தளங்களில்

# வாலிபர் கூட்டங்கள்

**பல்வேறு பிராந்தியங்களில் நடைபெற்ற வாலிபர் கூட்டங்களுக்காக நாம் தேவனைத் துதிப்போம்**

## ஹூப்ளி பிராந்தியம்



சுமார் 190 வாலிபர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் 22 வாலிபர் தங்களை தேவ ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தனர்.

## கோலார் பிராந்தியம்



110 பேருக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் 2 வாலிபர் தேவ ஊழியத்திற்கென தங்களை அர்ப்பணித்தனர்.

## தும்கா பிராந்தியம்



2025 அக்டோபர் முதல் வாரத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் சுமார் 900 பேர் கலந்துகொண்டார்கள். அநேகர் தங்கள் வாழ்வை முழுநேர ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார்கள். இக்கூட்டங்களை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த திருமதி. இங்க்ரீத், திரு. அண்டோ (செயற்குழு உறுப்பினர்), திரு. இம்மானுவேல் (சென்னை) ஆகியோரையும், தலைமை பொறுப்பெடுத்து அர்ப்பணிப்போடு பிரயாசப்பட்ட நமது மிஷனெரிகளையும் பாராட்டுகிறோம். தேவனின் இரட்சிப்பைப் பெற்று தங்களை முற்றிலும் அர்ப்பணிக்கும் வாலிபர் இன்றைய பெரிய தேவை. சந்தால் சமுதாயத்தில் தேவ பக்தியுள்ள விசுவாசிகள் மத்தியில் ஆவிக்குரிய, சமுதாய, பொருளாதார மறுமலர்ச்சியை தேவன் அருள ஜெபிப்போம்.

சந்தால் மற்றும் மால்தோ சமுதாயத்திலிருந்து அநேக வாலிபர் மிஷனெரிகளாகவும், IAS, IPS, IFS அதிகாரிகள், மிஷனெரி மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களாகவும் எழும்ப ஜெபிப்போம். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இவர்களை வழிநடத்தவும், ஆதரிக்கவும் ஆயத்த மாயுள்ளது.

## கப்ராடா (பெயிண்ட் பிராந்தியம்)



அக்டோபர் 21 & 22 அன்று கப்ராடாவில் மிகுந்த எதிர்பார்ப்புடன் நடைபெற்ற வாலிபர் முகாமில் சுமார் 1200 வாலிபர் கலந்துகொண்டார்கள். மேற்கு மும்பை வாலிபர் குழுவின் அர்ப்பணிப்புள்ள தலைமைத்துவத்தைப் பாராட்டுகிறேன். அவர்களது சிறப்பான முயற்சியின் மூலம் வடஇந்தியாவின் பல்வேறு பணித்தளங்களில் வாலிபர், பெண்கள், குழந்தைகள், இளம் வாலிபர்கள் ஆகியோர் மத்தியில் தன்னார்வமாக செய்து வரும் இவர்களது பணி பாராட்டுதற்குரியது. திருமதி. ஜான்சி ராபின்சன் மற்றும் அருள்திரு. அஜுபாய் வசாவே ஆகியோரின் வல்லமையான தேவ வார்த்தைக்காக நன்றி கூறுகிறேன். 38 வாலிபர் தங்களை முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

## சித்தாரா பிராந்தியம்



290 வாலிபர் கலந்துகொண்ட முகாமில் 12 பேர் தேவ பணிக்கு தங்களை அர்ப்பணித்தனர். இம்முகாம் சிறப்பாக நடைபெற கடுமையாக பிரயாசப்பட்ட பணித்தள செயலர் அருள்திரு. சாலமோன் ஞானசேகர், மண்டல செயலர் அருள்திரு. விஜயன், பிராந்திய செயலர் அருள்திரு. வினு, ஓய்வு பெற்ற மிஷனெரி அருள்திரு. ஆர்தர் ஜெபராஜ் மற்றும் பணித்தள மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் ஆகியோரை பாராட்டுகிறேன்.


இந்தியா முழுவதும் 1000 மிஷனெரி களை அனுப்ப வேண்டும் என்ற நமது இலக்கு நிறைவேற உழைக்கும் நமக்கு இப்படிப்பட்ட அர்ப்பணிப்புகள் மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றன. பணித்தளங்களில் வாலிபர் மத்தியில் தேவன் எழுப்புதலை அருளி அநேகர் முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்து ஆயத்தப்படுகிறார்கள். தேவ பணிக்காக தங்களை அர்ப்பணித்துள்ள வாலிபர்களுக்காக நாம் ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும். நமது நோக்கம் இப்படிப்பட்ட வாலிபர்களை ஆவிக்குரிய, அறிவு சார்ந்த மற்றும் உயரிய பணிக்காக பெலப்படுத்த வேண்டும். உங்களின் ஜெபமும், ஆதரவும் இப்படிப்பட்ட வாலிபர்களை ஊழியத்தில் நிலைத்திருக்கவும், வரும் நாட்களில் முழு நேர ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் உதவியாக இருக்கும். தேசத்தை சுவிசேஷத்தினால் சந்திப்பதிலும், ஆசீர்வாதத்தை கொண்டுவருவதிலும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பெரும் பங்கை வகிக்கிறது.

***தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்ப்போம்! தேவனுக்காக பெரிய காரியங்களை சாதிப்போம்!!***

**திரு. ஜாண் சாமுவேல்,**
தலைவர் - FMPB

# கஜோல்
## பணித்தளம்
### மேற்கு வங்காளம்


## MAP OF MALDA DISTRICT




## மேற்கு வங்காளம்

இந்தியாவின் கிழக்குப் பகுதியில், வங்காள விரிகுடாவின் ஒரு பகுதியை எல்லையாக கொண்டுள்ள மாநிலம் மேற்கு வங்காளம். இது இந்திய நாட்டின் நான்காவது அதிக மக்கள்தொகைக்கொண்ட மாநிலமாகும். இந்திய துணைக் கண்டத்தின் வங்காள பிராந்தி யத்தின் ஒரு பகுதியாக இது கிழக்கில் வங்காள தேசத்துடனும், வடக்கில் நேபாளம் மற்றும் பூட்டானுடனும் எல்லைகளைப் பகிர்ந்துகொள்கிறது. இதன் தலைநகரம் கொல்கத்தா ஆகும். இது இம்மாநிலத்தின் மிகப்பெரிய நகரம்.

இம்மாநிலம் டார்ஜிலிங், இமயமலைப் பகுதி, வளமான கங்கை டெல்டா, மலைப்பகுதிகள், கடலோர சுந்தரவனக் காடுகள் மற்றும் வங்காள விரிகுடா ஆகிய பல்வேறு புவியியல் பகுதிகளை உள்ளடக்கியது. உலகின் மிகப் பெரிய சதுப்புநிலக் காடுகளான சுந்தரவனக் காடுகள் மேற்கு வங்காளத்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. இம்மாநிலத்தின் முக்கிய இனம் வங்காள சமூகம். இங்கு வங்காள இந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.



*அருள்திரு. அனில் குமார் பிசோய் & திருமதி. ஆலிஸ் பிசோய்*

## கஜோல் (ஹல்திபாடி)

கஜோல் எனப்படும் நகரம் மேற்கு வங்காளத்தின் மால்டா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த பகுதி கிழக்கில் பாரிந்த் மற்றும் மேற்கில் தால் என்ற இரண்டு முக்கிய புவியியல் பிரிவுகளால் வகைப்படுத்தப்பட்டுள்ளது. பாரிந்த் பகுதி ஒப்பீட்டளவில் உயரமாகவும், சீரற்றதாகவும் உள்ளது. இங்குள்ள மண் சிவப்பு நிறத்தில் கடினமான உப்பு நிறைந்த களிமண். இரும்பு போல கடினமாக சுடப்படுகிறது. மகானந்தா நதியின் மேற்கே அமைந்துள்ள தால் பகுதி சதுப்பு நிலங்கள், பில்ஸ் மற்றும் ஆக்ஸ்போ ஏரிகளால் சிதறடிக்கப்பட்ட தட்டையான ஒரு தாழ்நிலமாகும். இது பெரும்பாலும் உள்ளூர் வெள்ளத்திற்கு ஆளாகிறது. இந்த பகுதியில் வசிக்கும் மக்களின் அதிகாரப்பூர்வ மொழி பெங்காளியாகும்.

## கஜோலில் நமது ஊழியம்







நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஆகஸ்டு 1, 2022 அன்று கஜோல் (ஹல்திபாடி) பணித்தளத்தில் ஊழியத்தைத் தொடங்கியது. அருள்திரு. அனில் குமார் பிசோய் மற்றும் திருமதி. ஆலிஸ் பிசோய் இப்பணித்தளத்தின் முன்னோடி மிஷனெரிகளாவர். இவர்கள் 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆய்வுகள் நடத்தி ராஜ்பான்ஷி மக்கள் மத்தியில் ஊழியத்தைத் தொடங்கினர்.

ராஜ்பான்ஷி என்ற சொல்லுக்கு 'அரச வம்சாவளி' என்று பொருள். முன் நாட்களில் கோச் என்று அழைக்கப்பட்ட இந்த சமூகம் முதன்மையாக விவசாயம் மற்றும் கூலி வேலைகளில் ஈடுபட்டனர். அவர்களின் முக்கிய பயிர்களில் நெல், சோளம் மற்றும் சணல் அடங்கும். முக்கிய உணவில் அரிசி, பருப்பு, மீன், முட்டை, கோழி, ஆட்டிறைச்சி மற்றும் காய்கறிகள் உள்ளன. மேலும் ஆண்கள் மது அருந்துவது பொதுவானது.

இவர்கள் இந்து பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகளைப் பின்பற்றுகிறார்கள். இந்து தெய்வங்களை வணங்குகிறார்கள். கோச் ராஜ்பான்ஷி சமூகம் விவசாயம், நடனம், இசை, நாட்டுபுற மருத்துவம், பாடல் மற்றும் வீடு கட்டுதல் ஆகியவற்றின் வளமான வாய்வழி பாரம்பரியத்தைப் பாதுகாக்கிறது.

## சவால்கள் மற்றும் அருட்பணி

நற்செய்தி எதிர்ப்பாளர்களிடமிருந்து மிஷனெரிகள் எதிர்ப்பை சந்தித்து வருகின்றனர். பெரும்பாலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டும் மக்களை இவர்கள் குழப்பமடையச் செய்கிறார்கள். இருப்பினும் இதுபோன்ற சவால்களுக்கு மத்தியில் தேவன் 62 ஆத்துமாக்களை கிருபையாக கொடுத்துள்ளார்.

### திருமதி. நிருபமா பர்மனின் சாட்சி

ஹரிராம்பாரா கிராமத்தைச் சேர்ந்தவர் திருமதி. நிருபமா பர்மன் (53 வயது). இவரது மூத்த மகனும், மகளும் அசுத்தாவியினால் துன்புறுத்தப்பட்டதால் மிகுந்த துயரத்தை எதிர்கொண்டார். பூஜைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக அவர்களை பல இடங்களுக்கு அழைத்துச் சென்றபோதிலும் அவர்களுக்கு விடுதலை கிடைக்க வில்லை. இச்சூழ்நிலையில் இவர் சந்தால் மக்கள் மத்தியில் நடைபெற்று வந்த ஆலய ஆராதனையில் கலந்துகொண்டார். சந்தால் விசுவாசிகளின் வாழ்க்கை மற்றும் நம்பிக்கையால் நெகிழ்ச்சியுற்று இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்தார். 2023 நவம்பர் 13 அன்று அவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்டு முதல் விசுவாசியானார். அவருடைய விசுவாச ஜெபத்தின் மூலம் அவரது மகனும், மகளும் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்று, அவர்களும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக

ஏற்றுக்கொண்டனர். தன்னுடைய விசுவாசத்திற்காக திருமதி. நிருபமா தொடர்ந்து எதிர்ப்பை சந்தித்தாலும் அவரும், அவரது முழு குடும்பமும் கர்த்தருக்குள் உறுதியாக நிலைத்திருக்கிறார்கள்.

### பிரகாஷ் சர்காரின் சாட்சி

ஃபதேபூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரகாஷ் சர்கார் (22 வயது) வியாதியினால் மரணப்படுக்கையில் இருந்தார். அவரது தாயார் தன் மகனுக்காக ஜெபிக்கும்படி விசுவாசி நிருபமாவை கேட்டுக்கொண்டார். நிருபமா மிஷனெரியை அழைத்து ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு பிரகாஷை குணமாக்கினார். ஆறு மாதங்களுக்குப் பிறகும் அவரது தாயார் தனது விசுவாசத்தை அறிக்கையிட தயாராகவில்லை என்றாலும் 2024 மே 14 அன்று பிரகாஷ் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தன் விசுவாசத்தை அறிக்கை செய்தார்.

இச்சாட்சியின் மூலம் பிரகாஷின் உறவினரான மங்கல்பாரி கமல்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலுவா தேப்சர்மா என்பவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார். அவரின் குடும்பத்தினர் தங்கள் கிராமத்தில் இயேசுவின் நற்செய்தியை தைரியமாய் அறிவித்து வருகின்றனர். இதன் மூலம் அநேகர் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள வாஞ்சைக் காட்டி வருகின்றனர். பிரகாஷின் வீட்டில் ஆலய ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. தற்போது மூன்று இடங்களில் விசுவாசிகள் கூடி தேவனை ஆராதித்து வருகின்றனர். திரு. பிரகாஷ் சர்கார் சுதேச ஊழியராக இணைந்து இப்பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

### முடிவு

கலாச்சாரத் தடைகள், ஆவிக்குரிய எதிர்ப்புகள் மற்றும் சமூக சவால்கள் மத்தியிலும் கஜோல் பணித்தளத்தில் தேவனின் நற்செய்தி ஒளி தொடர்ந்து பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. தேவன் தமது ஊழியர்களின் ஜெபம் மற்றும் பிரயாசங்களின் மூலமாகவும், விசுவாசிகளது சாட்சிகளின் மூலமாகவும் ராஜ்பான்ஷி மக்கள் மத்தியில் தனது ராஜ்யத்தை நிறுவி வருகிறார். தேவனுக்கே மகிமை!

## ஜெபக் குறிப்புகள்

- அறுவை சிகிச்சைக்குப்பின் நிற்கவும், நடக்கவும் சிரமப்படும் மூன்றரை வயது சிறுவன் ராஷித், நெஞ்சு வலியிலிருந்து கார்த்திக் சர்கார், நிற்கவும், பேசவும் முடியாமலுள்ள நரேந்திர பர்மன் ஆகியோரை தேவன் குணப்படுத்த.
- எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் விசுவாசத்திலும், தேவ வார்த்தையிலும் உறுதியாய் நிலைத்திருக்க.
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இயேசுவின் அன்பால் தொடப்பட்டு, கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து ஏற்றுக்கொள்ள.
- இப்பணித்தளத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க.
- ராஜ்பான்ஷி மக்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட.
- இங்கு பணி செய்யும் நமது மிஷனெரி அருள்திரு. அனில் குமார் பிசோய் மற்றும் திருமதி. ஆலிஸ் பிசோய் குடும்பத்தை தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபிப்போம்.


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, North Zone
சென்னை இளைஞர் பிரிவு
Online Registration
VISION 2030
வாலிபர் கூடுகை
2026 ஜனவரி
15 காலை 9 மணி முதல்
17 மாலை 1மணி வரை
(வியாழன், வெள்ளி, சனி)
இடம்
Sacred Heart
Matric. Hr. Sec. School
தேவராஜ் நகர், சோழிங்கநல்லூர்,
சென்னை – 600119
Theme
Light for the Gentiles
Acts 13:47
செய்தியாளர்கள்
Rev. Vijay P. Isaac
Rev. S. Emmanuel Ranjit Singh
Rev. G. Kingsley
Bro. A. Sam Daniel
மற்றும்
மிஷனரிகளின் அனுபவ சாட்சிகள்
பணித்தள பகிர்வுகளும் உண்டு.
• பதிவுக் கட்டணம் ₹200
• 18 முதல் 30 வயது இரட்சிப்பின் அனுபவம் உள்ள ஆண்/பெண் வாலிபர்கள் கலந்து கொள்ளலாம்.
• வேதாகமம், பெட்ஷீட், தட்டு, டம்ளர் கொண்டு வரவும்
தொடர்புக்கு | 9841032224, 9444396215, 9622220220, 9445200041, 9629303912, 8292390481

# நிலத்தில் விழுந்த கோதுமை மணி



## அருள்திரு. நாத்தான் குமார் பெபர்த்தா
(1972 - 2025)

அருள்திரு. நாத்தான் குமார் பெபர்த்தா அவர்கள், ஒரிசா மாநிலம் நௌரங்கபூர் மாவட்டத்தில் மொஹெந்தரி கிராமத்தில் திரு. இஸ்ரேல் பெபர்த்தா & திருமதி. மோனிகா பெபர்த்தா தம்பதியினருக்கு 02.01.1972இல் பிறந்தார். இவருக்கு 3 சகோதரிகளும், 3 சகோதரர்களும் உள்ளனர். தான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஆண்டவரை அறியாதவராகவே வளர்ந்து வந்தார். கிறிஸ்து இல்லாததொரு வெறுமையான வாழ்வையே மேற்கொண்டிருந்தார்.

ஒருநாள் தனது கிராமத்திலே இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்த போதகர் மூலமாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கம், பாடுகள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் முதலியவற்றை அறிந்து, உள்ளம் உடைபட்டு, பரிசுத்த ஆவியானவரின் தொடுதல் மூலமாக தான் ஒரு பாவி என உணர்த்தப்பட்டு, மனந் திரும்பி இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். 20 வயது வாலிபனான நாத்தான், இயேசு கிறிஸ்து தனக்காக சிலுவையில் மரித்து நித்திய ஜீவனை தனக்கு தந்தருளினார் எனவும், தனது பாவத்திற் கான முழு கட்டணத்தையும் அவரே செலுத்தி தன்னை சொந்த மகனாக ஏற்றுக்கொண்டார் எனவும் முழுமையாக விசுவாசித்தார். **பரிசுத்த ஆவியாலும் மற்றும் இயேசு கிறிஸ்துவின் கிருபையாலும் கிறிஸ்துவிலே பிறந்த நான், இன்று மரித்தாலும் அவரோடு நித்தியத்தில் இருப்பேன்** என கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அன்றே சாட்சிப் பகர்ந்தார்.

மேலும் ஜெபத்தின் மூலமாகவே இந்த உலகத்தில் வாழும் வழிமுறைகளை அறிந்திட முடியும் எனவும், ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கிறார் எனவும் நிச்சயித் திருந்தார். இரவும் பகலும் வேதத்திலே பிரியம் கொண்டு தியானித்து வந்தார். இதுவே தான் கடைப்பிடிக்கும் ஆவிக்குரிய ஒழுக்கப்பண்புகள் என குறிப்பிட்டுள்ளார். தனக்கு விடுதலை கொடுத்த இயேசு கிறிஸ்துவை, அவரை அறியாதவர்கட்கு அறிவித்திட அவரது உள்ளம் மிகுந்த பாரம்கொண்டது. நித்திய ஆக்கினையிலிருந்து விடுதலைப் பெற்ற தனக்கு இரண்டாம் மரணம் இல்லை என நிச்சயித்திருந்தார். தேவனது அன்பை அறிவிப்பதொன்றே தனது வாழ்வின் நோக்கம் என உணர்ந்து தேவ ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார்.

வேதத்தை முறையாகக் கற்றிட 1995ஆம் ஆண்டு Solid Rock Theological Seminary-யில் இணைந்து 1998ஆம் ஆண்டு தனது B.Th. படிப்பை முடித்தார். இதனூடே மத்தியப்பிரதேசம் மற்றும் ஒரிசா பகுதிகளுக்குச் சென்று சுமார் இரண்டு

மாதகாலம் சுவிசேஷ ஊழியங்களை செய்தார். தான் பெற்ற விடுதலையையும், அன்பையும் பிறரோடு பகிர்ந்துகொள்ள மிகுந்த தாகம் கொண்டிருந்தார். எனவே தேவ வழிநடத்துதலின்படியாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிலே 16.04.1998ஆம் ஆண்டு இணைந்தார். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு வரையில் நமது தலைமை செயலகத்தின் நிதித் துறையில் தேவ ஊழியத்தை நிறைவேற்றினார்.

ஒரிசா மாநிலம், நெளரங்கபூர் மாவட்டத்தின் மொசகுடா கிராமத்தைச் சேர்ந்த திரு. நப்தலி கோஸ்லா & திருமதி. சுலோச்சனா கோஸ்லா தம்பதியரின் மகளான நிருபமா கோஸ்லாவை 20.04.2001 அன்று திருமணம் செய்தார். 2002-2003ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தின் கச்சுவாவிலே மிஷனெரிப் பயிற்சியை குடும்பமாக நிறைவு செய்து, அசாம் மாநிலத்தில் ஊழியத்தைத் தொடர்ந்தனர். பாலிபாரா, லொக்ரா, கோபூர், தேமாஜி, நாராயண்பூர் போன்ற பணித்தளங்களிலே அசாமிஸ், மிஸ்ஸிங், நைஷி போன்ற மக்கள் மத்தியில் தேவ ஊழியத்தை திறம்பட செய்தார். 2007ஆம் ஆண்டு NELC திருச்சபையால் குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டார். இதனூடே 2017-2020 வரையில் பெங்களூர் SABC வேதாகம கல்லூரியில் B.D. பயின்று மீண்டுமாக அசாமில் ஊழியத்தைத் தொடர்ந்தார்.

இவர்களுக்கு கிளாட்சன் பெபர்த்தா (BPT at Vels Institute of Science, Chennai) என்ற மகனையும், நஹாலியேல் நான்சி பெபர்த்தா என்ற மகளையும் (BDS at SKS Sarabha Dental College, Punjab) ஆண்டவர் கொடுத்துள்ளார்.

எதிர்ப்புகள், பாடுகள் மத்தியிலே தேவ ஊழியத்தை சிறப்பாக செய்து, வறட்சியான இடத்திலேயும் ஆண்டவருக்காக அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, இரண்டு இடங்களில் ஆலயத்தையும் நிறுவினார். எத்தனை துன்பங்கள், பாடுகள் இருந்தாலும் அவற்றை தனது முகத்திலே வெளிக்காட்டாத அன்பு நெஞ்சம் கொண்டவர். எப்பொழுதும் புன்சிரிப்புடன் இருப்பது தேவன் இவருக்குக் கொடுத்த ஈவு.

விசுவாச உறுதியுடன் தேவ ஊழியத்தை செய்து வந்த சகோதரர் நாத்தான் குமார் 29.10.2025 அதிகாலை நேரம் அதிக நெஞ்சுவலியினால் அவதியுற்றார். உடனடியாக கோகாமுகிலிலே உள்ள மருத்துவமனைக்கு உடன் இருந்த மிஷனெரிகளால் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அத்தனை பிரயாசப்பட்டும் இரண்டு மணியளவில் சகோதரர் நம்மை விட்டு தேவனின் பாதத்திலே சரணடைந்தார். இவரது உடல் அசாமிலிருந்து ஒரிசா மாநிலம், நெளரங்கபூர் மாவட்டத்தின் மொஹெந்தரி கிராமத்தில் 31.10.2025 காலை 11.00 மணி அளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சகோதரர் அவர்கள் தனது வாழ்வை அசாம் மாநிலத்திற்காக அர்ப்பணித்துள்ளார். அவ்விடத்து மக்களுக்காக கோதுமை மணியாக விதைக்கப்பட்டுள்ளார். நிச்சயம் ஆண்டவர் இவரது அர்ப்பணத்தையும், தியாகத்தையும் கனப்படுத்தி மாபெரும் அறுவடையை கட்டளையிடுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தொடர்ந்து இவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக ஜெபித்துக்கொள்ளும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

*தொகுப்பாளர்,*

**அருள்திரு. ஆல்பர்ட் பிரபாகரன்**

(வெளியீட்டு பிரிவு)

# தேசிய விவசாயிகள் தினம்



## விவசாயிகள் – நமது தேசத்தின் பொக்கிஷங்கள்

நமது நாட்டின் உண்மையான தூண்கள் விவசாயிகள் ஆவர். நம் அனைவருக்கும் உணவு வழங்க அவர்கள் அயராது உழைக்கிறார்கள். இந்தியாவில், கிட்டதட்ட மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தை நம்பியுள்ளனர். பெரும்பாலான இந்திய விவசாயிகள் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் மசாலா பொருட்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இவைத்தவிர பருத்தி, கரும்பு, தேயிலை ஆகியவற்றைப் பயிரிடுகிறார்கள். மேலும் பால் பண்ணை, கோழி வளர்ப்பு, மீன் பிடித்தல் மற்றும் கால்நடை வளர்ப்பில் பங்களிக்கிறார்கள். அவர்களின் கடின உழைப்பின் மூலம் உணவு, தீவணம் மற்றும் மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். அவைகள் நமது பொருளாதாரத்திற்கு ஆதரவாக உள்ளது.

விவசாயிகள் நமது உயிர் காப்பாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு கிடைக்கும் மதிப்பு மற்றும் அங்கீகாரம் மிகக் குறைவு. துரதிர்ஷ்டவசமாக பலர் விவசாயத்தை ஒரு தாழ்ந்த தொழிலாக கருதுகிறார்கள். ஏனெனில் அதிலிருந்து மிகக் குறைந்த லாபமே கிடைக்கிறது. பணம் பெரும்பாலும் மதிப்பை வரையறுக்கும். இன்றைய உலகில் மக்கள் விவசாயிகளின் உண்மையான மதிப்பை அங்கீகரிக்கத் தவறிவிடுகிறார்கள். தங்கள் தட்டுகளில் பரிமாறப்படும் உணவு ஒரு விவசாயியின் வியர்வை மற்றும் உழைப்பின் விளைவாகும் என்பதை மறந்து விடுகிறார்கள். அவர்களின் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், 2001ஆம் ஆண்டில், இந்தியாவின் 5வது பிரதமரான சௌதரி சரண்சிங்கின் பிறந்த நாளான டிசம்பர் 23ஆம் தேதியை இந்திய அரசு **தேசிய விவசாயிகள் தினமாக** (கிஷான் திவாஸ்) கொண்டாடத் துவங்கியது. உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும், கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும் விவசாயிகளின் முக்கியப் பங்களிப்பை ஒப்புக்கொள்வதற்கு இந்நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தேசிய விவசாயிகள் தினம், நாட்டின் வளர்ச்சியிலும், பொருளாதார சமநிலையைப் பேணுவதிலும், விவசாயிகள் வகிக்கும் முக்கியப் பங்கை நமக்கு நினைவூட்டுகிறது. அவர்கள் எதிர்கொள்ளும் எதிர்பாராத மோசமான வானிலை, அதிகரித்து வரும் செலவுகள், நியாயமற்ற சந்தை நடைமுறைகள் போன்ற சவால்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது. விவசாயத் துறை இந்தியாவின் மொத்த மதிப்பு கூட்டலுக்கு குறிப்பிடத்தக்க பங்கையளிக்கிறது. மற்றும் நாடு முழுவதும் மில்லியன் கணக்கான மக்களின் உயிர் நாடியாக உள்ளது. நமது விவசாயிகளைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல் அவர்களது வலிமை, பாதுகாப்பு, செழிப்பு ஆகியவற்றிற்காகவும் ஜெபிக்க வேண்டும். விவசாயிகளை கௌரவிக்கும் ஒரு நாடு அதன் சொந்த அடித்தளத்தை கௌரவிக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

## ஜெபிப்போம்

- பயிர்கள் ஆரோக்கியமாகவும், வலுவாகவும் வளர சரியான அளவு மழை மற்றும் சூரிய ஒளிக்காக...
- பூச்சிகள், வெட்டுக்கிளிகள், நோய்கள், வெள்ளம், புயல்கள் போன்ற இயற்கை பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட...
- விளைப் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்க...
- சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்பட, குறிப்பாக அறுவடைக்குப்பின் விளைச்சல்கள் அழுகாதபடி பாதுகாக்கும் யுக்திகளை விவசாயிகள் கையாள...
- விவசாயிகள் தேவனால் ஆசீர்வதிக்கப்படவும், இழப்பு நேரங்களில் வலிமையும், நம்பிக்கையும் பெறவும், விரக்தியில் தற்கொலை எண்ணத்தில் விழாதபடி தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

## வாகனம் அர்ப்பணிப்பு



தென்சென்னை விரிவுப்பணியைச் சேர்ந்த 11 பேர் கொண்ட குழு 14.11.2025 அன்று ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள சண்டிகோலா, சிநேகாலயா சுகாதார மையத்திற்குச் சென்றோம். நம் இயக்கத்தின் மூலம் செயல்படும் மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக தாம்பரம் பிராந்திய விரிவுப்பணி குழுவினரால் வழங்கப்பட்ட ஜீப் ஒன்றை தேவ நாம மகிமைக்கென்று அர்ப்பணம் செய்தோம். அதைத் தொடர்ந்து நமது சிறுவர் இல்லங்கள் மற்றும் பந்தேனி பள்ளியைப் பார்வையிட்டு அங்கு பணிசெய்யும் நமது ஊழியர்களை ஊக்குவிக்க தேவன் உதவி செய்தார். இந்த வாகனத்தை வாங்குவதற்கு உதவி செய்த கௌரவ செயலர்கள், தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் இத்திட்டத்திற்காக தாராளமாக பங்களித்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

**அருள்திரு. சி.ஆர். ஜார்ஜ்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – தென் சென்னை

# பணித்தள விஜயம் & ஆலயங்கள் பிரதிஷ்டை



கர்த்தருடைய பெரிதான கிருபையால் சேலம் மாவட்டத்திலிருந்து 27.09.2025 முதல் 06.10.2025 வரை ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம், சந்தால் பணித்தளங்களை பார்வையிட மற்றும் ஆலய பிரதிஷ்டைக்காக குழுவாக சென்றோம்.



28.09.2025 அன்று ஜார்கண்ட் மாநிலம் சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியம் கதுவா பணித்தளத்தி லுள்ள பகாபந்த் என்ற கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தை சேலம் திரு. ஜாண் மணிமாறன் அவர்கள் குடும்பம் மற்றும் செல்வி. மெர்லின் பிரேமா பாய் அவர்கள் குடும்பமும் இணைந்து கட்டிக்கொடுத்தார்கள். சென்னை அண்ணாநகர் குழுவினர் & திரு. ஜாண் மணிமாறன் அவர்கள் குடும்பமும் ஆலய பிரதிஷ்டையில் கலந்துகொண்டார்கள்.



02.10.2025 அன்று சந்தால் மேற்கு வங்காள பிராந்தியம், சம்சி பணித்தளம், டக்கின்சாகர் கிராமத்தில் கட்டப்பட்ட புதிய ஆலயம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தை திரு. ஆசீர்வாதம் குடும்பத்தின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இணைந்து கட்டிக்கொடுத்துள்ளார்கள். இவர்கள் பிரதிஷ்டையிலும் கலந்து கொண்டார்கள்.



03.10.2025 அன்று சந்தால் மேற்கு வங்காள பிராந்தியம், கங்காராம்பூர் பணித்தளதிலுள்ள பனப்பக்கூர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயம் தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தை சேலம் திரு. ஞானம் குமார் குடும்பத்தினர் கட்டி கொடுத்துள்ளார்கள். பிரதிஷ்டையிலும் இவர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்த மூன்று ஆலய பிரதிஷ்டை வைபவத்தையும் சிறப்பாக ஒழுங்கு செய்த மண்டல செயலர், பிராந்திய செயலர், மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறோம். திரளான விசுவாசிகள் இப்பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மேலும் தெலோ பணித்தளம் மட்டியா கிராம ஆலய ஆராதனையிலும், இட்டாஹர் பணித்தள ஆலய ஆராதனையிலும், பசாகர் ஆலய ஆராதனையிலும் நாங்கள் கலந்து கொண்டோம். விசுவாசிகள் மத்தியில் எழுப்புதல், தேவ வல்லமை காணப் படுகிறது. முழுஇரவு ஜெபம், உபவாச ஜெபத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொள்கிறார்கள். விசுவாசி களிலிருந்து 22 பேர் மிஷனெரிகளாக சென்றிருக்கிறார்கள். நம்முடைய பணித்தள விசுவாசிகளிடமிருந்து இப்படி அநேக ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொண்டு தேவனுக்கு நன்றி செலுத்தி மகிழ்ச்சியோடு திரும்பினோம்.

**திரு. பாலசிங்,**
கௌரவ விரிவுப்பணி செயலர்-சேலம்


அதீத ஸ்நேகம்



செயல்வீரர் கீதங்களின் வரிசையில் **56** ஆம் பாகம் அதீத ஸ்நேகம் என்ற கருப்பொருளில் பென் டிரைவ் வெளிவந்துவிட்டது.

பென் டிரைவ்

நன்கொடை ரூபாய் 150/- மட்டுமே

# பணித்தள விஜயம்



தென்காசி மாவட்டத்திலிருந்து 10 பேர் அடங்கிய குழு 07.10.2025 - 17.10.2025 வரை குஜராத் மற்றும் மஹாராஷ்டிராவிலுள்ள பணித்தளங்களுக்குச் சென்று நமது மிஷனெரிகள் & விசுவாசிகளுடன் நேரம் செலவிட கர்த்தர் உதவி செய்தார். நமது இயக்கத்தின் 5 சிறுவர் விடுதிகளைப் பார்வையிடவும், ஜெபிக்கவும், மேலும் ஜாவ்டா விடுதி பிள்ளைகளின் கலாச்சார நிகழ்ச்சிகளைக் காணவும் தேவன் கிருபை செய்தார். பணித்தளங்களைப் பார்வையிடச் சென்ற எங்களை தங்களின் கலாச்சார நடனத்துடன் வரவேற்றனர். இரவுக்கூடுகையில் தேவ வார்த்தையைப் பகிரவும், மேலும் சில்வாசா, நவாப்பூர், காண்ட்பாரா போன்ற பணித்தளத்திலுள்ள திருச்சபை மக்களுடன் சிறப்பு கூடுகை மற்றும் ஆராதனையில் பங்குபெற கர்த்தர் கிருபை செய்தார். சிஞ்ச்பாடா, போர்சாட் பகுதிகளில் முன்னேற்றப்பணி செய்யும் மற்றும் நமது விடுதியில் படித்து, உயர்வான வேலைக்குச் சென்றிருந்த பிள்ளைகளின் சாட்சி எங்களை மிகவும் உற்சாகப்படுத்தியது. இவையாவும் நாங்கள் இன்னும் அதிகமாய் ஜெபிக்கவும், ஊழியத்தைத் தாங்கவும் உதவியாக இருந்தது. நம் மிஷனெரிகளின் அர்ப்பணிப்புள்ள ஊழியத்திற்காக தேவனைத் துதிப்போம். அவர்கள் அனைவருக்காகவும் நன்றி கூறுகிறோம்.

**Rev. C. ஆசீர் செல்வராஜ்,** விரிவுப்பணி செயலர் – நெல்லை மேற்கு



கோயம்புத்தூர் பணி மாவட்டத்தின் ஜெபக்குழுத் தலைவர்களாக 13 பேர், அக்டோபர் 6 முதல் 15 வரை ஜம்மு மற்றும் பஞ்சாப் மாநிலத்திலுள்ள நமது பணித்தளங்களை பார்வையிடச் சென்றிருந்தோம். ஜம்மு மாநிலத்தில் நமது விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளை சந்தித்ததோடு ஜம்முவின் எல்லைப் பகுதிகளை பார்வையிடவும் வாய்ப்புப் பெற்றோம். பஞ்சாபின் அமிரிஸ்டார் பணித்தளத்தை பார்வையிட்டதோடு அங்கு நடைபெற்ற பொன் விழா & வெள்ளிவிழா கொண்டாட்டத்திலும் பங்கு பெற்றோம். பஞ்சாப் மக்கள் மத்தியில் தேவன் தந்த அறுவடையை கண்டு தேவனை உளமாரத் துதித்து அக்டோபர் 15ஆம் தேதி கோயம்புத்தூர் திரும்பினோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. பி. டேவிட்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – கோவை.

# மிஷனெரி பிரதிஷ்டை



31.08.2025 அன்று அரசூர், பொள்ளாச்சியிலுள்ள லேம்-போ திருச்சபையில் முதல் முறையாக இரண்டு மிஷனெரிகளின் பிரதிஷ்டை ஆராதனை லேம்-போ திருச்சபையின் போதகர் C. சாமுவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பிரதிஷ்டை ஆராதனையை அருட்திரு. பால்ராஜ், போதகர் C. சாமுவேல், Rev. டேனியல் தாமஸ் மற்றும் Rev. ஜாண் சாமுவேல் ஆகியோர் இணைந்து நடத்தினார்கள். தமிழ்நாடு மாநில முன்னேற்றப்பணி செயலர் Rev. டேனியல் தாமஸ் அவர்கள் கண்ணீரோடு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். நமது மிஷனெரிகளைத் தாங்கும் லேம்-போ திருச்சபையின் போதகர் மற்றும் விசுவாசிகளையும், திரு. வில்லியம் ஸ்டேன்ஸ் அவர்ளது குடும்பத்தையும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக வாழ்த்துகிறோம். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் ஆனைமலை பகுதிகளிலிருந்து நமது கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள், ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இப்பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு சிறப்பித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**Dr. மனோகர்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர்-பொள்ளாச்சி



26.10.2025 அன்று பாலக்காடு, CSI தூய திருத்துவ ஆலயத்தில் வைத்து ஹரியானா மாநிலத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி பிரதிஷ்டை செய்யப்பட்டார். இப்பிரதிஷ்டை ஆராதனையில் மிஷனெரி குடும்பமாக கலந்துகொண்டு பணித்தள செய்திகளைப் பகிர்ந்துகொண்டார். Rev. ஸ்டான்லி ஜார்ஜ் அவர்கள் தேவ செய்தியை வழங்கினார்கள். Rev. மேத்யூ ஜார்ஜ் Holy Trinity Church (Vicar & Chairman) அவர்கள் மிஷனெரியை பிரதிஷ்டை செய்தார்கள். அவர்களோடு Rev. ஜோய் அலெக்ஸ், CSI Robinson Memorial Church (Vicar & Chairman) மற்றும் Rev. சிபு சக்கரியா, CSI St. Andrews Church, (Vicar & Chairman) ஆகியோரும், நமது ஜெபக்குழுத் தலைவர்களான சகோ. கிருஷ்ணகுமார் மற்றும் சகோ. ஸ்மைல் அவர்களும் கலந்துகொண்டார்கள். திரு. சிஜி ஜாண் நைனான் அவர்கள் நமது மிஷனெரியை தாங்கி ஆதரிக்கிறார்கள். பாலக்காடு பகுதியில் முதன்முறையாக நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைக்காக தேவனைத் துதிப்போம்.

**திரு. செரியன் PP,** கௌரவ விரிவுப் பணி செயலர் – பாலக்காடு



# பயிற்சி மையம் பிரதிஷ்டை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பணி மாவட்டத்திலிருந்து திருவாளர் மார்ட்டீன் ஜெயகர் ராய் தலைமையில் ஆறு சகோதரர்களாக ஜார்கண்ட், ஒரிசா எல்லையிலுள்ள பாரஜம்டா என்ற இடத்தில் திரு. கே. ஜாண் ஜெபக்குமார் அவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட சபைசார்ந்த பயிற்சி மையத்தை திறந்துவைத்து, பணித்தளத்தைப் பார்வையிடச் சென்றார்கள்.

18.10.2025 மாலை புறப்பட்டு 20.10.2025 மதியம் சாய்பாசாவில் இறங்கினர். நமது மிஷனெரி கணேஷ் குடும்பமும், திரு. சுரேஷ் மால்டோ, சுதேச ஊழியரும் அன்புடன் வரவேற்று, விசுவாசி திரு. தீபக் மான்சோ இல்லத்திற்கு அழைத்துச்சென்றனர். பின்னர் ஜகன்நாத்பூரிலுள்ள விசுவாசியின் குடும்பத்தை சந்தித்தனர். இரவு ஜேம்நானி ஆலயத் திற்குச் சென்ற அவர்களை விசுவாசிகள் பாரம்பரிய வழக்கத்தின்படி கால் கழுவி ஆடல் பாடலுடன் வரவேற்றனர். சுமார் 60 பேர் இவ்வாராதனையில் கலந்துகொண்டனர்.

21.10.2025 அன்று பயிற்சி மையம் சென்றபோது சபை மக்கள் மற்றும் போதகர்கள் அன்புடன் வரவேற்றனர். சுமார் 300 பேர் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டனர். பயிற்சி மையத்தை சகோ. கே. ஜாண் ஜெபக்குமார் திறந்துவைத்தார்கள். சகோ. டேவிட் இறைசெய்தி அளித்தார். இக்கட்டிடம் சபை ஆராதனை நடத்தவும், சபை மூப்பர், சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் ஆகியோர் பல இடங்களிலிருந்து வந்து பயிற்சிப்பெறவும் பயன்படும். இது தூரநோக்கோடு கட்டப்பட்டது. மாலை யுலிபுறுவில் மச்சுவா மக்களோடு ஆராதனையில் கலந்துகொண்டனர். இரவு பிஹ்கோர் இன மக்கள் மத்தியில் நடக்கும் ஊழியங்களை பார்வையிட்டனர். இக்குழு 23.10.2025 புறப்பட்டு 25.10.2025 காலை கருங்கல் வந்தடைந்தார்கள். தேவன் அம்மக்கள் மத்தியில் நடத்தும் அதிசயங்கள், அற்புதங்கள், மக்களின் விசுவாச வாழ்வு யாவும் காணும்போது நம் ஜெபமும், ஈகையும் வீண்போகவில்லை என்பதை நிரூபிக்கிறது.

**திரு. எஸ். சத்தியராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – கருங்கல்

# ஆலய பிரதிஷ்டை



கன்னியாகுமரி பிராந்தியம், நாகர்கோவில் பணிமாவட்டத்தைச் சேர்ந்த திரு. டேவிட் நேசமணி அவர்களின் பொருளுதவியால் மஹாராஷ்டிரா மாநிலம், பிளாஸ்நேர் பணித்தளத்திலுள்ள லக்டியா கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயம் 10.08.2025 அன்று தேவநாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த பிரதிஷ்டை ஆராதனையில் நாகர்கோவில் பணி மாவட்டத்தி லிருந்து திரு. டேவிட் நேசமணி அவர்கள் உட்பட 13 பேர் கலந்துகொண்டனர். இந்த ஆலய பிரதிஷ்டையில் மிஷனெரி திருமதி. ஜெபரோஸ் விஜயன் அவர்களும், அங்குள்ள மற்ற மிஷனெரிகள், ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளும் கலந்துகொண்டு பிரதிஷ்டை ஆராதனையை சிறப்பித்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**Rev. T. ஆல்பின்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – கன்னியாகுமரி

# மகிமைக்குள் பிரவேசித்தார்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குலசேகரம் பணி மாவட்டத்தின் கொட்டூரில் ஜெபக்குழுத் தலைவராக செயல்பட்ட திரு. செ. எட்வின் சேவியர் அவர்கள் 25.09.2025 அன்று இறை அழைப்பைப் பெற்றார். இவர் 31.07.1977 அன்று திரு. செல்லசுவாமி & திருமதி. லீலா பாய் என்பவர்களுக்கு மூத்த மகனாகப் பிறந்து இறை உறவில் வளர்க்கப்பட்டு, பட்டப்படிப்பிற்கு பின்பு மும்பை பட்டணத்தில் பணி செய்தார். கொரோனா காலத்திற்குப் பின்பு சொந்த ஊரான குலசேகரத்திற்கு வந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் தன்னை இணைத்துக்கொண்டு கருத்தாய் ஜெபித்து, தீவிரமாக ஊழியத்தில் ஈடுபட்டு வந்தார். வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் இல்லங்களை சந்தித்து காணிக்கைப் பெற்று அனுப்புவதில் தானே முன்வந்து உழைத்தவர். இவரது மறைவு நமது ஊழியத்திற்கு மிகப்பெரும் இழப்பாகும். இவரைப் பிரிந்து வாடும் இவரது மனைவி மற்றும் மகனின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**குலசேகரம் பணி மாவட்டத் தலைவர்கள்.**

# மிஷனெரி பிரதிஷ்டை



திண்டுக்கல் மாவட்டம், பழனி சி.எஸ்.ஐ. இம்மானுவேல் ஆலய குருவானவர் அருள்திரு. டாக்டர். ஜி.பி. ராஜா அவர்களால் நமது மிஷனெரிகள் இரண்டு பேர் 26.10.2025 அன்று பிரதிஷ்டை செய்யப் பட்டார்கள். இப்பிரதிஷ்டை ஆராதனையில் ஆந்திரப்பிரதேசம், சித்தூர் பகுதியில் ஊழியம் செய்யும் மிஷனெரி தேசாய் திலீப் பாய் பணித்தள ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துகொண்டார். அருள்திரு. அசரியா ராஜ்குமார் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டார். அதே நாளில் நடைபெற்ற குடும்பக் கூடுகையில் சுமார் 140 பேர் கலந்துகொண்டனர். இவர்கள் 25 இடங்களில் நடைபெறவுள்ள இயேசு திரைப்பட ஊழியத்தின் தேவைகளை சந்திக்க முன்வந்துள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. எம்.பி. ஆல்பர்ட் சாமுவேல்,** விரிவுப்பணி-திண்டுக்கல்



26.10.2025 அன்று உடுமலைப்பேட்டை, CSI இம்மானுவேல் ஆலயத்தில் இரண்டு மிஷனெரிகளின் பிரதிஷ்டை ஆராதனை DCC தலைவர் அருட்திரு. P. செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பிரதிஷ்டை ஆராதனையை அருட்திரு. P. செல்வராஜ், அருட்திரு. S. டேனியல் தாமஸ் மற்றும் அருட்திரு. A. ஜாண் சாமுவேல் அகியோர் இணைந்து நடத்தினார்கள். தமிழ்நாடு மாநில முன்னேற்றப்பணி செயலர் அருட்திரு. S. டேனியல் தாமஸ் அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார்கள். மிஷனெரிகளைத் தாங்கும் திரு. எபிநேசர் ஆண்டர்சன் மற்றும் Dr. ஹெஃபிலியா ஸ்டீபன் ஆகியோரின் குடும்பங்களுக்கு நமது இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. D. மலர் ஸ்டீபன், சேகர செயலர், திரு. பால் சற்குணம், சேகர பொருளர், DC & PC அங்கத்தினர்கள் மற்றும் சபை மக்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம். உடுமலைப்பேட்டை ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இப்பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு சிறப்பித்ததற்காக நம் தேவனைத் துதிப்போம்.

**திரு. T. சாமுவேல் விக்டர்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர், உடுமலைப்பேட்டை



# பணித்தள விஜயம்

இந்த ஆண்டில் பணித்தள விஜயத்திற்காக இராயபுரம், தண்டையார்பேட்டை பகுதியிலிருந்து 12 பேர், மத்திய பிரதேசத்திலுள்ள கண்டுவா பிராந்தியத்திற்குச் சென்றோம். 13.10.25 அன்று இரவு கண்டுவா சிறுவர் விடுதியில் தங்கி, 14.10.25 அன்று கால்வா பணித்தளத்திலுள்ள விசுவாசியின் வீட்டில் கூடி விசுவாசிகளுடன் இணைந்து இரவு நெடுநேரம் ஆண்டவரை ஆராதித்தோம். 15.10.25 அன்று பகலில் நேபாநகர் பணித்தளத்திலுள்ள ஆலயத்தில் விசுவாசிகளுடன் இணைந்து தேவனை ஆராதித்து, அன்று இரவு பால் பணித்தளத்திலுள்ள பஜர்குதிரா ஆலயத்தில் மிஷனெரி மற்றும் சுதேச ஊழியர் குடும்பங்களுடன் இணைந்து ஜெபித்தோம். 16.10.25 அன்று பகலில் கர்கோன் பணித்தளத்திலுள்ள சிலோட்டியா கிராமத்தில் நமது விசுவாசிகளின் சிறப்பான வரவேற்புடன் ஆலயத்திற்குள் சென்று கர்த்தரை ஆராதித்து, மாலை நமது சிறுவர் விடுதியிலுள்ள சிறுவர், சிறுமிகளுடன் இனிமையாக நேரம் செலவிட்டோம். 17.10.25 அன்று அதிகாலையில் பணித்தளத்தின் இனிய நினைவுகளுடனும், மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளுக்காக தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்ற உணர்வுடனும் சென்னை திரும்பினோம்.

**திரு. வி. சந்திரசேகரன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – வட சென்னை.

# மகிமைக்குள் பிரவேசித்தார்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ராயப்பேட்டை பகுதியில் ஸ்கேன் தலைவராக ஊழியத்தை நிறைவேற்றி வந்த திரு. செல்லதுரை அண்ணன் (90 வயது) 25.09.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். 20 வருடங்களுக்கும் மேலாக ராயப்பேட்டை மற்றும் திருவல்லிக்கேணி பகுதிகளில் மிதிவண்டியிலும் மற்றும் நடந்தும் சென்று ஸ்கேன் உண்டியல் காணிக்கைகளை சேகரித்தும், ஜெபித்தும் ஊழியங்களை நிறைவேற்றினார்கள். அன்னாரை இழந்து வாடும் அவரது மனைவி மற்றும் மகன், மகள்கள் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்**
– ராயப்பேட்டை, சென்னை.

# ஸ்கேன் குடும்பக் கூடுகை & மிஷனெரி பிரதிஷ்டை




ஆண்டவரின் பெரிதான கிருபையால் 12.10.2025 ஞாயிறு மாலை ராமாபுரம் கோயில்பிள்ளை பள்ளி வளாகத்தில் ஸ்கேன் குடும்பக் கூடுகை மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. இதில் நமது மிஷனெரிகள் 10 பேர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். Rev. ஸ்டீபன் ஜாய்சன், Rev. தேவதாஸ், Rev. சத்திய மகேஷ், Rev. ஆல்பர்ட் பிரபாகரன், சகோ. GPS ராபின்சன், Rev. சுந்தர்சிங் மற்றும் ஊழியர்கள் இணைந்து நமது மிஷனெரிகளை பிரதிஷ்டை செய்தனர். மிஷனெரிகளை ஜெபத்தினாலும், ஈகையினாலும் தாங்கும் 10 குடும்பங்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம். இக்கூடுகையில் சகோ. GPS ராபின்சன் அவர்கள் தேவ செய்தி அளித்து ஜெபித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. T. ஆஸ்டின்,** கௌரவ விரிவுப்பணி செயலர், கே.கே. நகர், சென்னை

# பணித்தள விஜயம்



21.10.2025 அன்று வள்ளியூரிலிருந்து 12 பேர் கொண்ட குழுவாக பஞ்சாப் மாநிலம் ஃபரித்கோட் சென்றோம். 23.10.2025 அன்று காலை பஞ்சாப் மாநில கரிசனைகளுக்காக ஜெபித்தப்பின், அங்கு இளம் வயதிலேயே கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகளான சகோ. ஜெபக்குமார் மற்றும் சகோ. நிஜாம் முசாரி ஆகியோருடைய கல்லறைகளைப் பார்வையிட்டு அவர்களின் வாழ்க்கை மற்றும் ஊழியங்களுக்காக தேவனைத் துதித்தோம். பின்னர் சப்பாவாலி கிராமத்தில் நடைபெற்ற கூடுகையில் சகோ. ஜெபக்குமாரோடு இணைந்து ஊழியம் செய்த மஹிந்தர் கௌர் என்பரின் சாட்சிகள், 'நாம் தேவனுக்கு என்ன செய்திருக்கிறோம்' என்று சிந்திக்க வைத்தது. 25.10.2025 அன்று கான்பூர்

பிராந்திய ஊழியர்களுடன் இணைந்து பகல் முழுவதும் உத்தரப்பிரதேச மாநிலத்திற்காக ஜெபித்தோம். ஆறு வருடங்களுக்குப் பின் ஜெபக்குழுவினரோடு இணைந்து ஜெபித்தது ஊழியர் குடும்பங்களை பெரிதும் உற்சாகப்படுத்தியது. 26.10.2025 ஞாயிறு அன்று பொக்கராயன் பணித்தளத்திலுள்ள தேவிப்பூர், மாச்சா, கிராயன்பூர், பரோர், பிப்ரி, பொக்ராயன் ஆகிய ஆறு சபைகளுக்கும் இரண்டு இரண்டு பேராகச் சென்று எங்கள் சாட்சிகளையும், தேவ வசனத்தையும் பகிர்ந்துகொண்டோம். அன்று மாலை நட் இன மக்கள் மத்தியில் நடைபெற்ற கூடுகையில் கலந்துகொண்டோம். மறுநாள் 27.10.2025 ஜான்சி பயிற்சி மையம் சென்று ஊழியர்களுடன் ஜெபத்தில் பங்குபெற்றதோடு, அருகிலுள்ள சிறுமியர் விடுதியையும் பார்வையிட்டோம். அன்று இரவு புறப்பட்டு 29.10.2025 அதிகாலை நெல்லை வந்தடைந்தோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**விரிவுப்பணி செயலர்** – நெல்லை தெற்கு

# தரிசனம் பெற்றோர் ஆயிரம் – 2030

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு இளைஞர் இயக்கம். தேவ அழைப்பைப்பெற்ற அநேக வாலிப சகோதர, சகோதரிகள் இந்த இயக்கத்தில் இணைந்து, இந்திய தேசத்தில் வாழ்ந்து வரும் பல இன மக்கள் மத்தியில் தேவப்பணியை நிறைவேற்றி வருகிறார்கள். தேசத்தைக் குறித்ததான இயேசு கிறிஸ்துவின் பாரத்தை நிறைவேற்ற இன்னும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவே இதனை நிறைவேற்ற தமிழ் நாட்டின் முன்னேற்றப்பணி ஊழியர்களும் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்களும் பாரத்தோடு ஜெபித்தபோது உருவான தரிசனம். அதாவது வருகிற 2030ஆம் ஆண்டிற்குள் 1000 புதிய வாலிப சகோதர, சகோதரிகளைக் கண்டுபிடித்து இந்த தேசத்தின் மீட்பிற்காக கலாச்சாரம் கடந்து பணிசெய்யும் மிஷனெரிகளாக அனுப்ப வேண்டும் என்பதே இந்த தரிசனத்தின் உன்னத நோக்கம். இந்த அவசரமான, அவசியமான இயக்கத்தின் மிகப்பெரிய நோக்கஆயிர நிறைவேற உங்கள் அனைவருடைய ஜெபங்கள் அதிகம் தேவை.

***"ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்"*** *(மத். 9:38).*

மேலும் உங்கள் பகுதியிலுள்ள 12-ம் வகுப்பு முடித்த, கல்லூரியில் பயிலுகின்ற மற்றும் பயின்று முடித்த அனைத்து கிறிஸ்தவ வாலிப சகோதர, சகோதரிகளிடம் இந்த தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அத்துடன் நாம் நடத்தும் வாலிபர் கூடுகைகளில் அவர்கள் பங்குபெற உற்சாகப்படுத்துங்கள். இது குறித்ததான கூடுதல் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளும்படி பட்சமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## உங்கள் ஜெபம் வேண்டி

- கிறிஸ்தவ வாலிப சகோதர, சகோதரிகள் மிஷனெரி தரிசனம் பெற,
- அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைப் பற்றிய கரிசனை ஏற்பட,
- வாலிபர்களை திசை திருப்பக்கூடிய எல்லா அந்தகார கிரியைகளும் அழிக்கப்பட,
- கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் வாலிபப் பிள்ளைகளை தேவனுக்கென்று அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

# இளம் வாலிபர் முகாம்

## வட சென்னை பிராந்தியம்

நாள்: 2026 ஜனவரி 15 காலை 9 மணி முதல் 17 மதியம் 2 மணி வரை
இடம்: Olive Tree Global School, மஞ்சம்பாக்கம், சென்னை
செய்தி: **சகோ. Y. நவநீதர், சகோ. P. சத்தீஸ் குமார்** மற்றும் **மிஷனெரிகள்**
தொடர்பு: 9342343643 / 9840021110 / 9841598653 / 9622250220

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



சென்னை, வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த ஆசிரியை திருமதி. G. வெற்றிச் செல்வி அவர்கள் கடந்த 19.10.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் கடந்த 30 ஆண்டுகளாக நம் இயக்கத்தில் ஜெபக்குழுத் தலைவியாக செயல்பட்டவர். பலமுறை நமது பணித்தளங்களுக்குச் சென்று நமது ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபித்து, மிஷனெரிகளை உற்சாகப்படுத்தி வந்தவர். அநேகருக்கு இம்மிஷனெரி ஊழியத்தை அறிமுகப்படுத்தி, அவர்களை செயல்படவைத்தவர். தம் பிரயாசத்தின் மூலம் அநேகருக்கு வேதாகமங்களை வாங்கிக்கொடுத்து அவர்களை ஆண்டவரண்டை நடத்தியவர். அவரது இழப்பு நமது இயக்கத்திற்கு பேரிழப்பு. மேலும் அவர்களை இழந்து தவிக்கும் இரண்டு மகள்கள், மருமகன்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. C. பிச்சைமணி,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – வடசென்னை –2.



திரு. கனகராஜ் அண்ணன் அவர்கள் ஈரோடு மாவட்டத்தின் ஜெபக்குழுத் தலைவராக 40 ஆண்டுகள் செயலாற்றினார். ஈரோட்டை சுற்றியுள்ள கிராமங்களில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை அறிமுகப்படுத்தி வைத்தார். பல ஜெபக் குழுக்களையும், ஜெபக்குழுத் தலைவர்களையும் உருவாக்கி ஜெபிக்கவும், கொடுக்கவும் வழிநடத்தினார். தன்னுடைய மகனை (அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ், ஸ்கேன் செயலர்) வடஇந்திய ஊழியத்திற்கு அனுப்பிவைத்தார். தன்னுடைய பெண் பிள்ளைகளின் குடும்பங்களை ஜெபக்குழுத் தலைவர்களாக ஏற்படுத்தி தன்னுடைய காலத்திற்குப் பிறகு முன்னேற்றப்பணி ஊழியம் தடையில்லாமல் நடைபெற வழிவகுத்தார். கடந்த 30.10.2025 அன்று தன்னுடைய 87வது வயதில் உலக ஓட்டத்தை நிறைவு செய்து தேவ ராஜ்யத்தில் பிரவேசித்துள்ளார். அண்ணனை இழந்து நிற்கும் மகன் மற்றும் மகள்கள் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. எட்வர்ட் ராஜதுரை,** விரிவுப்பணி செயலர் – ஈரோடு பிராந்தியம்.

# பணித்தள விஜயம்




திருநெல்வேலி, பெருமாள்புரம் ஜெபக்குழு சார்பில் அக்டோபர் 10-17 தேதிகளில் உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள நமது பணித் தளங்களைப் பார்வையிடவும், மிஷனெரிகளுடன் இணைந்து ஜெபிக்கவும் 10 பேர் கொண்ட குழுவாக சென்றோம். நானக்மட்டா பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரியின் வீட்டில் தங்கி அநேக கிராமங்களைச் சந்தித்தோம். சுந்தர்நகர், நவ்சார், தேஜாபோஜா, பன்பசார், ஹர்தாஸ்பூர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் நமது விசுவாசிகளை சந்தித்து, அவர்களது வீட்டு ஜெபக்கூட்டத்தில் பங்கு பெற்றோம். இறுதி கட்ட கர்ப்பப்பைப் புற்றுநோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்ற லாஜோ கௌர், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல் ஒருசேர பாதிக்கப்பட்டு மரண விளிம்பிலிருந்த மக்கன்சிங், முடக்கு வாதத்திலிருந்து அற்புத சுகம்பெற்ற லக்ஷ்மி பாய் ஆகியோரின் சாட்சி எங்களை பிரமிக்கவைத்தது. தேஜாபோஜோ மற்றும் ஜாபர்பூர் கிராமங்களில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்றோம். இங்கு ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகள் 5 குடும்பங்கள் மற்றும் 2 சுதேச ஊழியர்களுடன் இணைந்து உபவாசித்து அந்தகாரத்தின் பிடியில் சிக்கியுள்ள உத்தரகாண்ட் மாநிலத்திற்காக பாரத்தோடு ஜெபித்தோம். மேலும் நேபாளம் சென்று அங்கு ஜெபநடை மேற்கொண்டோம். 17ஆம் தேதி அன்று பத்திரமாக திருநெல்வேலி வந்தடைந்தோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**Dr. M.A. ஜாண்சன் சார்லஸ்,** குழு ஒருங்கிணைப்பாளர், திருநெல்வேலி

# மகிமைக்குள் பிரவேசித்தார்



திருமதி. நேசம் அவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் எமில் அண்ணன் காலத்திலிருந்து 58 ஆண்டுகளாக நாசரேத் ஜெபக்குழுத் தலைவியாகவும், மற்றும் நாசரேத் வட்டாரத்தில் மிஷனெரி பணியை திருச்சபைகளுக்குள் எடுத்துச் சென்றும் மிகவும் சிறப்பாக தேவனுக்கு தீவிரமாக பணி செய்தவர். அதிகாலை எழுந்து தேசத்திற்காக, திருச்சபைகளின் எழுப்புதலுக்காக, மிஷனெரி பணிக்காக சீராக ஜெபிக்கும் பழக்கமுடையவர். இப்போதும் நாசரேத் ஜெபக்குழு பணியை அவர்களுடைய குடும்பத்தினர் செய்து வருகிறார்கள். திருமதி. நேசம் அவர்களை இழந்து தவிக்கின்ற குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. T Y P ஆசீர்,**
விரிவுப் பணி செயலர் - தூத்துக்குடி தெற்கு




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா மாங்வெய் ஃபோம்
செல்வி. ஜுன்மோனி மிலி

# ஜம்மு

## ரியாசி:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** கர்த்தரின் கிருபையால் ஐந்து புதிய கிராமங்களை சந்திக்க தேவன் வாய்ப்பளித்தார். அநேக சவால்களின் மத்தியிலும் எட்டு பேர் தேவனுடைய மந்தையில் இணைந்தனர். சிறுநீரகத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த ராஜு ஜெபத்தின் மூலம் குணமானார். திர்மாபூர் கிராமத்தில் இரண்டு பேர் சுவிசேஷத் திற்கு வாஞ்சை காட்டுகின்றனர். கீழே விழுந்ததால் இரண்டு கைகளும் செயலிழந்த சிறுமி மானிஷா ஜெபம் மற்றும் சிகிச்சையின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் வசிக்கும் ராஜ்புத், மாஷா, சாம்யார், வால்மீகி, இஸ்லாமியர், குஜ்ஜர், பிராமணர், பகத் இன மக்கள் மற்றும் சத்தீஸ்கர், உத்தரப்பிரதேசத்திலிருந்து வேலை நிமித்தம் இங்கு தங்கியிருப்போர் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; வயதுக்கேற்ற சரீர வளர்ச்சியின்றி பாதிக்கப்பட்டுள்ள சுதேச ஊழியர் சுமேஷ் மசியின் மகன் டானிஷ் ஆரோக்கியமாக வளர; உடல் நடுக்கத்திலிருந்து கௌரவ் குமார், மார்பு புற்றுநோயிலிருந்து அஞ்சலி, மார்பெலும்பு பிரச்சனையிலிருந்து முகமத் (2 வயது), உதிரப்போக்கிலிருந்து கம்லேஷ் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## தார்:

**லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்**

**துதிக்க:** எதிர்ப்புகளின் மத்தியில் இரண்டு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். கடோர்நாத் குடும்பம் புதிய தொடர்பாளராக கிடைத்துள்ளனர். ட்ரேட்டி என்ற இடத்தில் வசிக்கும் ஜாகி இன மக்கள் மத்தியில் ஞாயிறு ஆராதனைத் துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்க சவாலாக உள்ள துனேரா, மட்டி, கோட், புங்கள், அவாங், த்ரியால், ஹர்யால் ஆகிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; புண்ணிய ஸ்தலத்தைத் தேடி இப்பணித்தளத்திற்கு வரும் திரளான மக்கள் மெய் தேவனை அறிந்துகொள்ள; பக்கவாதத்திலிருந்து பிமல் பிரகாஷ் சுகம்பெற; குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேஷ்ராஜ் விடுபட; ட்ரேட்டி ஆராதனைக்குழு தடையின்றி பாதுகாப்புடன் தொடர்ந்து நடைபெற; பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் நமது மிஷனெரிகளுக்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் ராஜதுரை
திருமதி. புஸாரே ஷைலா சிந்தாமன்
திரு. தாங்பியாக்முவான்
திருமதி. அனாமிகா பெகு நெகேமியா

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** தொடர் காய்ச்சலிலிருந்து சிவ்ராமுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். இரண்டு மாதங்களாக கடினமான முதுகுவலியினால் அவதியுற்ற பாய்தேவிக்கு தேவன் சுக மருளினார். ஆகார் என்ற பகுதியில் இரவு ஜெபக்கூடுகை சிறப்பாக நடைபெற்றது. மிஷனெரியின் இளைய மகன் ஜோயலுக்கு கண் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற தேவன் உதவி செய்தார். ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புல்மாயா மற்றும் அவரது மகள் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; ஷேர்சிங் மற்றும் அவரது மகன் அஜய் நீரிழிவு நோயிலிருந்து சுகம்பெற; அசுத்தாவியின் தாக்குதலிலிருந்து அம்ரித்தாவுக்கு தேவன் விடுதலை அருள; சுதேச ஊழியர் கும்ப்தாஸின் பெலவீனங்களை தேவன் நீக்கி பூரண சுகமருள; சேத்ரியின் குடலிறக்க அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற; கலா தேவியின் கணவர் குடியிலிருந்து விடுபடவும், விசுவாசத்தில் வேரூன்றி வளரவும் ஜெபிப்போம்.

## ஜியோரி:

### ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

**துதிக்க:** சாக்ஷியின் திருமணம் நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபை செய்தார். வாலிபர் பயிற்சியில் 7 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். நான்கு வருடங்களாக நீதிமன்ற வழக்கை சந்தித்து வந்த சுதேச ஊழியர் ஹிராலாலுக்கு தேவன் வெற்றியைத் தந்தார். அறுவடை நாட்களில் விசுவாசிகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சீவ் தேவி தன் குடும்பத்தாருடன் இணைந்து வாழ; முதுமையினிமித்தம் சுகவீனமாயிருக்கும் உமா, க்யான் தேவி, ஷியாம், டில்பு தேவி, சுக்ரி தேவி, ஹரிதாஸ் ஆகியோருக்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தைத் தந்தருள; அமரிசிங் குடும்பம் மற்றும் விசுவாசத்தில் பின்தங்கியோர் மனந்திரும்பி ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளரவும், பாசு மனந்திரும்பி தேவனைத் தேடவும், விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும் ஜெபிப்போம்.

உபவாச
ஜெபநாள்




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா அன்ன சாந்தினி பிரைட்

# பஞ்சாப்

## பகாபூரானா:

### சிவசங்கரன் & மெர்சி எலிசபெத்

**துதிக்க:** இரண்டு இடங்களில் நடைபெற்ற வேதாகம போட்டியில் விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். முதன்முறையாக நடைபெற்ற சத்சங் கூடுகையில் அநேகர் பங்குபெற்றனர். ஹர்விந்தர் குடும்பத்தை புத்திர சந்தானத்தினால் தேவன் ஆசீர் வதித்தார். விசுவாசி ரிகேஷின் மகள் திருமணம் ஆலயத்தில் ஆசீர்வாதமாக நடைபெற்றது. அதிக காய்ச்சல் மற்றும் குறைந்த இரத்த அணுக்களினால் அவதியுற்ற அணுப்ஜாகேர் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் சந்திக்கும் தடைகள் நீங்க; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய சுதேச ஊழியர் மற்றும் தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; விசுவாசத்தை விட்டு பின்வாங்கியோர் மனந்திரும்பி மீண்டும் தங்கள் விசுவாசத்தை புதுப்பித்துக்கொள்ள; விசுவாசியின் மகள் ஹீனாவுக்கு நிரந்தரமான வேலையை தேவன் தந்தருள; நடைபெறவுள்ள முகாம் மற்றும் பயிற்சிகள் பயனுள்ளதாக அமைய ஜெபிப்போம்.

## அஹ்மத்கட் மண்டி:

### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** வாலித்பூர், உமர்புரா, நாத்துமஜ்ரே ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். டெங்கு காய்ச்சலிலிருந்து மன்பிரீத், சுக்கா, ரீனா, சோட்டா லால் ஆகியோருக்கு தேவன் சுகமருளினார். ராஜுவின் திருமணம் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். ஜோத்துடைய கண் அறுவை சிகிச்சையில் தேவன் உதவி செய்தார். குர்மித் சிங்கின் காலில் கீரிப்பிள்ளை கடித்தபோதிலும் எவ்வித பாதிப்புமின்றி அவரைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழைக்காலத்தில் பரவும் வைரல் காய்ச்சல், டெங்கு, குறைந்த இரத்த அணுக்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகளுக்கு தேவன் சுகமருள; மன்பிரீத்தின் இரண்டு வயது மகன் ராஜ்வீரின் மூளையில் ஏற்பட்டுள்ள காயத்தை தேவன் குணப்படுத்த; விசுவாசிகளின் மத்தியில் தேவன் ஒருமனப்பாட்டின் ஆவியை தந்தருள; திட்டமிட்டுள்ள அனைத்து ஊழியங்களும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற; மலௌத் ஆலயம் விரைவில் திறக்கப்பட்டு விசுவாசிகள் கூடி ஆராதிக்க தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பேபி செலினா அருள்ராஜ்

## அம்ரித்சர்:

**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், இரண்டு சத்சங் கூடுகை நடத்தவும் தேவன் கிருபை செய்தார். குஷி கௌர் ஜெபத்தின் மூலம் கடுமையான வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றார். நேஹா கௌருக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். விசுவாசி மணிக்கு விமான நிலையத்தில் வேலைக்கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாடிப்படியிலிருந்து விழுந்ததினால் நெற்றி எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள ரெஹேமாத் கௌர் விரைவில் சுகம்பெற; அசுத்தாவியின் பிடியிலிருந்தும், மனநிலை பாதிப்பிலிருந்தும் சாம்சேர் சிங் என்ற புதிய தொடர்பாளருக்கு தேவன் விடுதலை அருள; குடியின் அடிமைத்தனத்திலிருந்து குர்மித் சிங், ரோஷான் சிங், மன்பிரீத், சஞ்சு, மஞ்சித், மணிசிங் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; ஊழியத்திற்கு அதிக எதிர்ப்பு தெரிவித்து வரும் ராஜ் கௌர், பால்வன், சன்னி, தல்வீர்சிங் ஆகியோர் மனந்திரும்ப; ஊழியம் விரிவடைய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## புத்லாடா: பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** புத்லாடா ஆலயத்தின் 25ஆம் ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். பப்யானா, கட்ரிவாலா ஆகிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பிந்தேர் கௌரின் குடும்பப் பிரச்சனை ஜெபம் மற்றும் ஆலோசனைகளின் மூலம் நீங்கி சமாதானம் பெற தேவன் உதவி செய்தார். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த பால் கௌர் குடும்பம் தொடர் ஜெபத்தின் மூலம் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். குல்தீப் சிங்கின் ஜெபத்தைக் கேட்ட தேவன் வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்க உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி அநேக ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் நிக்கு சிங், விக்கி சிங், ஷீட்டல், காஜல் ஆகியோரின் குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; நடைபெறவுள்ள சத்சங் கூடுகைகள், படக்காட்சி ஊழியம், பெண்கள் மற்றும் வாலிபர் பயிற்சி யாவும் தடையின்றி சிறப்பாக நடைபெற; சுதேச ஊழியர் ராம்சிங், தன்னார்வ ஊழியர்கள் சுதேஷ் ராணி மற்றும் ஜாஸ்பல் சிங் ஆகியோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.




**பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்**

**துதிக்க:** டைபாய்டு மற்றும் வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஜஸ்பீர் கௌர், மஹிந்தர், சந்தீப் ஆகியோரின் குடும்பத்தினர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். அநேக தடைகளைத் தாண்டி தனது வீட்டை கட்டி முடிக்க ஜஸ்பீர் கௌருக்கு தேவன் கிருபை செய்தார். இப்பணித்தளத்தில் ஊழியம் விரிவடைய தேவன் ஒரு தன்னார்வ ஊழியரைத் தந்துள்ளார். மூன்று வருடங்களுக்கு மேலாக அசுத்தாவியின் பிடியில் சிக்கித்தவித்த பிந்தேர் சிங்கிற்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருவோர் தடையின்றி இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சத்வீர் சிங் என்ற வாலிபனை போதைப் பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; நடைபெறவுள்ள சத்சங் கூடுகை, பயிற்சி முகாம்கள், இரவு கூடுகை, நற்செய்தி அறிவித்தல் யாவும் தடையின்றி நடைபெற; மழையினால் இடிந்துவிழுந்த தாலிதேவியின் வீடு மீண்டும் கட்டப்படுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட; தானோ தேவி மற்றும் ஜஸ்வந்த் கௌர் ஆகியோரை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

**பட்டாலா:**
**வால்வி நேதாஜி டாடு & கல்பனா**

**துதிக்க:** சபை மூப்பர் பயிற்சி, பெண்கள் பயிற்சி, செக்வான் ஆலய கன்வென்ஷன் யாவும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். புல் அறுக்கும்போது தவறுதலாக கையில் பெரிய காயம் ஏற்பட்டபோதிலும் எவ்வித பாதிப்புமின்றி விசுவாசி சத்தியாவுக்கு தேவன் அற்புத சுகமருளினார். மழையினால் இடிந்து விழுந்த விசுவாசி தேஹ்டாவின் வீட்டை மீண்டும் கட்டி எழுப்ப தேவன் உதவி செய்து வருகிறார். சிறுநீரகத் தொற்றினால் மிகவும் பாதிக்கப்பட்ட பீட்டரை பூரணமாய் குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுமான், பிரேம்கா, ராஜ்சிங் ஆகிய புதிய தொடர்பாளர்கள் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; விபத்தில் காயமுற்ற பரம்ஜித், ராமன், ரேகா, மோஹித் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; நெஞ்சு வலியிலிருந்து நேஹா, ஒற்றைத் தலைவலியிலிருந்து பரம்ஜித், நாய் கடியிலிருந்து ராம்தாஸ் ஆகியோர் சுகம்பெற; ஐந்து வருடங்களாக உடல் எரிச்சலினால் படுக்கையில் அவதிப்பட்டு வரும் மிஷனெரியின் தாயார் ருக்கம் மாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட ஜெபிப்போம்.




## உத்தராகண்ட்

**நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** பட்டியா என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். அன்சு என்பவர் ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். மாடு முட்டியதால் காலில் ஏற்பட்ட ஆழமான காயத்திலிருந்து சுந்தர் நகரைச் சேர்ந்த ஜீத் சிங் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். தீ காயத்திலிருந்து 10ஆம் வகுப்புப் படிக்கும் ரோஹித் விரைவில் குணமாக தேவன் உதவி செய்தார். 15 நாட்களாக படுக்கையிலிருந்து எழும்ப முடியாமலிருந்த ஃபிளாரன்ஸின் வியாதியை குணமாக்கி எழுந்து நடக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நானக்மட்டாவில் ஆலயம் கட்ட விரைவில் நிலம் வாங்கப்பட; தெயோரி மற்றும் ஹரைய்யா ஆகிய கிராமங்களில் எவ்வித எதிர்ப்புமின்றி ஞாயிறு ஆராதனை மீண்டும் துவங்கப்பட; கை எலும்பு முறிவினால் கஷ்டப்படும் பஜன் கௌர், சிறுநீரகக்கல் மற்றும் பித்தப்பை கல்லினால் அவதியுறும் அமர்ஜீத் கௌர் ஆகியோரை தேவன் குணப்படுத்த; திருமணமாகாததினால் மன அழுத்தத்திலிருக்கும் அக்கு மற்றும் சிம்லோ கௌருக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையைக் கட்டளையிட; கணினி படிப்பு முடித்துள்ள அமித்துக்கு விரைவில் ஆசிரியர் வேலை கிடைக்க ஜெபிப்போம்.

## ஹரியானா

**ஜீவன் நகர்:**

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** இருசக்கர வாகன விபத்திலிருந்து மிஷனெரியை தேவன் பாதுகாத்தார். இரண்டு வருடங்களாக பின்மாற்றத்திலிருந்த அலிகா கிராமத்தைச் சேர்ந்த மதன்கோபாலின் குடும்பம் மற்றும் லம்பி கிராமத்தைச் சேர்ந்த குர்ஜீத் கௌர் குடும்பம், ஊழியர் மற்றும் விசுவாசிகளின் தொடர் ஜெபத்தினால் மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்வதோடு விசுவாசித்தில் உறுதியாக உள்ளனர். மிஷனெரி தீபிகா ஜெனாவின் உடல் நிலையில் தேவன் தந்து வரும் முன்னேற்றத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடும்பப் பிரச்சனையினிமித்தம் கணவன் மற்றும் பிள்ளைகளால் கைவிடப்பட்டுள்ள விசுவாசியின் மகள் அஞ்சு மீண்டும் குடும்பத்துடன் இணைந்து வாழ; வாய் புற்றுநோயிலிருந்து ஜாஷா அற்புத சுகம்பெற; இப்பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; இப்பணித்தளத்தில் காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பீனாக்ஷி B. வசாவா சுனில்

திரு. பிதான் ஹன்ஸ்தா

## தோஷம்:

### அஜய் பர்டே & ஷைதுல்

**துதிக்க:** வாலிபர் முகாமில் கலந்து கொண்டோர் ஆவிக்குரிய வாழ்வில் உற்சாகம் பெற்றுள்ளனர். விசுவாசி அஜய்க்கு கர்த்தர் ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்தருளினார். ஜெபத்தின் மூலம் லக்ஷ்மிக்கு நல்ல வேலையை தேவன் தந்துள்ளார். சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து காந்தாவுக்கும், வயிற்று வலியிலிருந்து இஷிகாவுக்கும் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர் மற்றும் பெண்கள் முகாமில் கலந்துகொள்வோரின் வாழ்வில் தேவன் மாற்றத்தை ஏற்படுத்த; கருத்துவேறுபாட்டினால் பிரிந்து வாழும் சன்னி & மோனிகா ஒருமனப்பட்டு இணைந்து வாழ; முகேஷ், பிரவீன், லக்ஷ்மண், பூணம், காந்தா, விஜய், லக்ஷ்மி ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பக்கவாதத்திலிருந்து சன்னியின் தாயாருக்கும், தலைவலியிலிருந்து புல்லோவுக்கும் தேவன் சுகமருள; நிகானா, ரிவாசா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## உதய்பூர்:

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டுள்ளார். விசுவாசியின் மகன் ஷியாம் லாலுக்கு விவசாயத் துறையில் பதவி உயர்வு கிடைக்க தேவன் உதவி செய்துள்ளார். சுதேச ஊழியர்களான சுஷில் கசோடா மற்றும் ஷியாம் லால் பாஜாட் குடும்பங்களுக்கு புத்திர சந்தானம் அருளி தேவன் ஆசீர்வதித்துள்ளார். காச நோயிலிருந்து சுஷில் கோத்ரா, சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து நிராடா, மலேரியா மற்றும் நீரிழிவு நோயிலிருந்து பிரகாஷி பாய் மற்றும் ஆனந்தி லாலுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். காட்கியாபாலா ஆராதனைக் குழுவில் இரண்டு புதிய குடும்பங்கள் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உபத்திரவங்கள் பெருகிவரும் இந்நாட்களில் பீல் இன மக்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; நடைபெறவுள்ள ராஜஸ்தான் சர்பஞ்ச் தேர்தலில் தேவன் தமக்கு சித்தமான தலைவர்களை தந்தருள; காட்கியாபாலா கிராமத்தில் ஆலயக் கட்டுமானப்பணி தடையின்றி விரைவில் ஆரம்பிக்கப்பட; மலேரியா, டெங்கு போன்ற காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகளை தேவன் குணப்படுத்த; கருச்சிதைவு ஏற்பட்டதால் சோர்ந்துபோயுள்ள லீலா, நீலா, சோனியா ஆகியோருக்கு தேவன் மீண்டும் குழந்தை பாக்கியம் தந்தருள; ஆனந்தி லால், மோகன் லால், ஷியாம் லால், ஆஷிஷ் டாமோர் ஆகிய சுதேச ஊழியர்களுக்கு தேவன் சுகபெலன் மற்றும் பாதுகாப்பை அருளி ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்
செல்வி. டோன்ஸாசின்
திருமதி. ரீனா ஆரோன்சிங்

**கோர்வாடா: கெனோஜ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்தினி**

**துதிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின் விசுவாசத்துடன் ஜெபித்தினால் லக்ஷ்மண் பாய் தன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளார். இரவு முழுவதும் தூங்காமல் அழுதுக்கொண்டிருந்த குழந்தை யாமின் ஜித்து, இரத்த வாந்தியிலிருந்து சங்கீதா பென், வலிப்பு நோயிலிருந்து ஆஷா பென், மலேரியாவிலிருந்து தில்குஷ்பாய், தோல் வியாதியிலிருந்து பண்ணாலால், உடல் ஊறலிலிருந்து கம்லா பென் ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். மானிஷா பெனின் வீட்டு பசுமாடு சுகவீனப்பட்டு சாப்பிடாம லிருந்தபோது ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி நிஷா பேனின் ஒரு வயது குழந்தையின் கால் வீக்கம் மற்றும் பெலவீனம் மறைய; புதிதாக ஆராதனையில் கலந்துகொள்ளும் காலுபாய், துர்கா பென் மற்றும் நாராயண் பாயின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; இரத்தசோகையிலிருந்து ரீனா பென், மூன்று மாதங்களாக காய்ச்சலினால் அவதியுறும் பாயல் ஆகியோருக்கு தேவன் சுகமருள; வயிற்று வலியினால் கஷ்டப்படும் நான்கு மாத கர்ப்பவதி யான இந்திரா பெனின் வயிற்றிலுள்ள சிசுவை தேவன் பாதுகாக்க; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள காந்தி பாய், ரமேஷ் பாய், அசோக் பாய், ஹக்ரா பாய், சாந்திலால் மற்றும் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டுள்ள ராகேஷ் பாய், தருண், நிலேஷ், ஜித்தேந்திர பாய், குகா பாய், துர்கா பென், ரமிலா பென், லீலா பென் ஆகியோர் விடுதலை பெற ஜெபிப்போம்.

**டிடி: தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா**

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து பிந்து பென் மற்றும் சங்கர் பாய் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். வியாதியின் படுக்கையிலிருந்து ரமிளா பென், கடுமை யான தலைவலியிலிருந்து பிரியங்கா பென், தோல் வியாதியிலிருந்து நரேஷ் மற்றும் மம்தா, மூட்டுவலியிலிருந்து சாமு பென், டைபாய்டு காய்ச்சலிலிருந்து குஷி பென் ஆகியோருக்கு தேவன் சுகமருளினார். ஜெபத்தின் மூலம் ரீனா பென் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிற்று கட்டியிலிருந்து துலாஜி, வாய்ப்புண்ணிலிருந்து ஷாமு, மலேரியாவிலிருந்து தெளரி பென், தோல் நோயிலிருந்து ஆஷா & மஹிமா ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; நர்மதா பென் மற்றும் சமுத்ரா பெனுக்கு தேவன் சுகப் பிரசவம் அருள; கர்பினா மற்றும் கக்கிதார் கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; ஆஷா தனது செவிலியர் படிப்பை தடையின்றி படித்து முடிக்க; கோகியா மற்றும் பட்டியா பகுதிகளில் ஆலயம் கட்ட ஊர் தலைவரின் அனுமதி கிடைக்க; ஸ்னாவர், அமர்புரா, பாரா, ஸ்னட்டா, காயா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைத் தந்தருள ஜெபிப்போம்.




## உத்தரப்பிரதேசம்

### ஹசேரன்: சுரேஷ் மால்டோ & பிரேம் லதா மால்டோ

**துதிக்க:** இருதய அறுவை சிகிச்சை நல்ல படியாக முடிந்து மீண்டும் பணித்தளம் திரும்ப மிஷனெரி சுரேஷ் மால்டோவுக்கு தேவன் கிருபை பாராட்டினார். சபை மூப்பர்கள் விசுவாசத்திலும், வேத வசனத் திலும் நிலைத்திருக்க தேவன் உதவி செய்து வருகிறார். முகுத் சிங் என்ற சுதேச ஊழியரை இப்பணித்தளத்திற்கு தந்து உதவின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூடப்பட்டுள்ள டாகர்வாபூர் ஆலயம் விரைவில் திறக்கப்பட்டு மீண்டும் ஆராதனை நடைபெற; ஹசேரன் & மோட்டேகப்பூர்வா ஆராதனைக் குழுக் களில் அநேகர் வாஞ்சையோடு கூடி தேவனை ஆராதிக்க; மிஷனெரி சுரேஷ் மால்டோவுக்கு தேவன் தொடர்ந்து பூரண சுகமருள ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி

**துதிக்க:** நட் மற்றும் மோர்யா சமுதாயத்தைச் சேர்ந்த நமது விசுவாசி களது சாட்சிகளின் மூலம் புதிதாக அநேகர் ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். கடந்த மாதம் முழுவதும் வியாதிகளுக்கும், விபத்துகளுக்கும் விலக்கி விடுதி பிள்ளைகள் மற்றும் ஊழியர்களை தேவன் பாதுகாத்தார். கிராம ஊழியங்கள், படகாட்சி ஊழியங்கள், வேதபாட வகுப்புகள், சிறு ஜெபக்குழுக்கள் யாவும் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதி பிள்ளைகள் படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் முன்னேற்ற மடைய; கிராம ஊழியத்தில் தேவன் பாதுகாப்பை தந்தருள; உள்ளூர் விசுவாசிகள் சுவிசேஷத்தை தங்கள் உறவினர்களுக்கும், கிராமத்தினருக்கும் உற்சாகமாய், தைரியமாய் அறிவிக்க; மிஷனெரி ஓம் பிரகாஷின் பெற்றோர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து பிங்கி மற்றும் சுகியாவுக்கு தேவன் விடுதலை அருளினார். புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் ஸ்ரீபாலின் மகள் சப்னம்க்கு பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். பல ஆண்டுகளாக குடிக்கு அடிமைப்பட்டிருந்த மனோஜ்க்கு தேவன் விடுதலை அருளினார். இரண்டு நாட்கள் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் 60க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேகனா மற்றும் பைசோலி ஆலயங்கள் விரைவில் திறக்கப்பட்டு ஆராதனை நடைபெற; மோகினிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தரின் நீதிமன்ற வழக்கு விரைவில் முடிவடைய; மானிஷா மற்றும் மம்தா குடும்பங்களை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; எதிர்ப்பினிமித்தமாக விசுவாசத்தில் பின்தங்கியிருக்கும் மத்திராம்பூர் விசுவாசிகள் தேவனிடம் திரும்ப; கர்கேப்பூர்வா ஆலய கட்டுமானப்பணி தடையின்றி நடைபெற; வாலிபர்களின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்.

உபவாச
ஜெபநாள்




**ஜின்ஜக்: பும்சோன்சின் & லுன்சிங்**

**துதிக்க:** மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தேவன் உதவி செய்தார். போலா நகர் ஆலயத்தில் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் சுதேச ஊழியர்களின் பயிற்சி சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். எட்டாவா கிராமத்தில் ஆராதனைக்குழு துவங்க தேவன் உதவி செய்தார். ஆலயத்தில் நடைபெற்று வந்த கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக முடிவடைய உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்தின் மேலிருந்த சிலுவையை உடைத்ததோடு, விசுவாசிகளை மிரட்டி வரும் மதவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விபத்தினால் தொடை மற்றும் காலில் அதிக வேதனை அனுபவித்து வரும் குட்டிக்கு தேவன் பூரண சுகமருள; எட்டாவா கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனைக்குழு தடையின்றி தொடர்ந்து நடைபெற; நமது இயக்கத்திற்கு எதிராக செயல்படும் சுனில் குமார், ஜெயகரன் ஆகியோரின் இருதயத்தில் தேவன் கிரியை செய்யவும், தங்கள் தவறுகளை உணர்ந்து மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

**ரணியா: அனில் குமார் & கவிதா**

**துதிக்க:** ஜான்சியில் நடைபெற்ற வாலிபர் கூடுகை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பாரஜோரே ஆலயத்தின் 15ஆம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். திருமணமாகி பத்து ஆண்டுகளுக்குப்பின் ஜெபத்தின் மூலம் லாலிக்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து சுமித்ரா, சுனிதா, ரீனா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பக்கவாதத்திலிருந்து மீனாவுக்கு தேவன் சுகமருள; ஹர்நாம் குடும்பம் விசுவாசத்தில் வேரூன்றி வளர; அக்பர்பூரில் புதிதாக உருவாகியுள்ள மதவாத குழு மூலம் ஊழியத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் தேவன் பாதுகாக்க; ஊர்மிளாவின் குடும்பத்தினர் வியாதியினிமித்தம் விசுவாசத்தில் பின்வாங்கியுள்ளனர். தேவன் அவர்களை குணப்படுத்தி விசுவாசத்தில் பெலப்படுத்த ஜெபிப்போம்.

## *ஆபத்தில் அடைக்கலம்*

*பஞ்சாப் மாநிலம், அஹ்மத்கட் மண்டி பணித்தளத்தைச் சேர்ந்த விசுவாசி நேகா என்ற இளம்பெண் வெண்ணீர் சூடுபண்ண வாளியில் மின்சார ராடை பயன்படுத்தினாள். அவள் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு சுவிட்ச் போர்டிலிருந்து ராடை எடுக்கும் போது மின்சாரம் தாக்கி தூக்கி எறியப்பட்டாள். அவளது உடைகள் மற்றும் கால்கள் ஏற்கனவே ஈரமாக இருந்தன. கீழே விழுந்த அவள் மிகவும் பெலவீனமாக இருந்ததால் யாரையும் சத்தமாக உதவிக்கு அழைக்கக்கூட முடியவில்லை. ஆனாலும் முழுபெலத்தை பயன்படுத்தி இயேசுவே என்னை காப்பாற்றும் என்று கத்தினாள். உடனே யாரோ ஒருவர் வந்து அவளை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தார். சுயநினைவை இழந்த அவளுக்காக விசுவாசிகள் ஒன்று கூடி பாரத்தோடு ஜெபித்தனர். கிருபையின் தேவன் அவளுக்கு ஜீவனை அருளி வீடு திரும்ப உதவி செய்தார். அல்லேலூயா!*




## பஸ்தி:

**ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி**

**துதிக்க:** மூச்சுத் திணறலினால் பாதிக்கப்பட்டிருந்த சுனிதாவை மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். எதிர்ப்புகள் மத்தியில் பின்தொடர் ஊழியம் தடையின்றி நடைபெற்று வருகிறது. விசுவாசி அம்ரேஷ் தன்னார்வ ஊழியருக்கு புதிய சைக்கிள் ஒன்றை வாங்கிகொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி ரேகாவை இழந்து தவிக்கும் அவரது கணவர் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கு தேவன் ஆறுதலளிக்க; கல்லீரல் மற்றும் இரத்த சோகையினால் அவதியுறும் ராம்ராஜ் மற்றும் சீமாவுக்கு தேவன் சுகமருள; வீட்டு ஆராதனைக் குழுக்கள் தடையின்றி நடைபெற; சபை மூப்பர்கள் மற்றும் வாலிபர்களுக்கு நடத்தவிருக்கும் பயிற்சி மிகுந்த பலனைத் தர; கிறிஸ்துவின் நிமித்தம் அண்டை வீட்டாரால் மிரட்டல்களை சந்தித்து வரும் பூல்மதிக்கு தேவன் பாதுகாப்பை அருள ஜெபிப்போம்.

## பொக்ராயான்:

**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** நட் பஞ்சாயத்து தலைவர் முகுந்தலால் வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சத்சங் கூடுகையில் பலர் கலந்துகொண்டு நற்செய்தியைக் கேட்டனர். பிரயாக்ராஜ் என்ற பகுதியில் புதிய ஆராதனைக் குழு ஒன்றைத் துவங்க தேவன் உதவி செய்தார். வினிதாவின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. வாலிபர் முகாமிற்கு வந்திருந்த டாலி என்ற இளம் பெண்ணுக்கு சரீரத்தில் சர்க்கரை அளவு குறைந்து சுவாச பிரச்சனை ஏற்பட்டது. நள்ளிரவில் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதி மறுக்கப்பட்டதால் தூரத்திலுள்ள மிஷன் மருத்தவமனையில் சேர்க்கப்பட்டு பூரண சுகம்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொக்ராயன் சிறுவர் பராமரிப்பு மையத்தின் பழுதுபார்க்கும் பணி விரைவில் முடிவடைய; ஆலய நில ஆவணங்கள் நமது இயகத்தின் பெயரில் விரைவில் மாற்றப்பட எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; மான்சா ஆலயத்தின் சுற்றுச்சுவர் கட்டும்பணி விரைவில் முடிவடைய; சுவிசேஷம் அறிவிக்கப்படாத நட் இன மக்கள் வாழும் கிராமங்களில் தேவன் திறந்த வாசலை தந்தருள; நட் சமுதாய சிறுவர்களுக்கென விடுதி ஒன்று துவங்கப்பட; நமது விசுவாசிகளுக்கு முதியோர் கல்வி திட்டமும், தையல் பயிற்சியும் விரைவில் துவங்கப்பட; மரித்துப்போன சஞ்சயின் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலைத் தந்தருள ஜெபிப்போம்.




# மத்தியப் பிரதேசம்

## டப்ரா:

**சத்திகாந்த் பரிச்சா & சகரிகா பிரதான்**

**துதிக்க:** சுல்தான்பூர், கிட்டேந்திரா, நயாகாவ், பிதர்வார் ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் கூடுகை மற்றும் இரண்டு இடங்களில் சபை மூப்பர் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. சாசன் மற்றும் செக்ரா கிராமங்களில் நடைபெற்ற சத்சங் கூடுகையில் அநேகர் உற்சாகத்துடன் பங்குபெற்றனர். காஜல் மற்றும் ஹசினா குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். சபை விசுவாசிகள் வேத வசனத்தை மனனம் செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்தும், முதுகு தண்டுவட வலியிலிருந்தும் மம்தா பாயை தேவன் குணப்படுத்த; அனில் மற்றும் அவரது சகோதரன் மகேஷ் மத்தியில் தேவன் சமாதானத்தை அருள; பித்தப்பை கல் பிரச்சனையிலிருந்து அனில் சுகம்பெற; டக்ரா மற்றும் பிதர்வார் பகுதிகளில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; பிரேம்நகரில் ஆலய வேலைகள் விரைவில் துவங்கப்பட ஜெபிப்போம்.

## கர்கோன்:

**பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா**

**துதிக்க:** இனம்புரியாத நோயினால் அவதிபட்டு வந்த பவன்பாய் தேவனை விசுவாசித்து ஏற்றுகொண்ட உடன் பூரண சுகம்பெற்றார். பயத்தின் ஆவியிலிருந்து ராஜேஷ் பாயையும், பிசாசின் பிடியில் சிக்கித்தவித்த உமாவையும் ஜெபத்தின் மூலம் தேவன் விடுவித்தார். ஜெபத்தின் மூலம் சாரியின் கழுத்திலிருந்த கட்டி மறைந்தது. அர்ஜுன் வாழ்வில் மனந்திரும்புதலை கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாய் புற்றுநோயிலிருந்து பெலார்சிங், மார்பு புற்றுநோயிலிருந்து பிரசாந்தின் தாயார், அடிக்கடி சுயநினைவை இழந்துவரும் நேஹா ஆகியோர் அற்புத சுகம்பெற; மஞ்சள்காமாலையினால் கோமாவிலிருக்கும் அனிதாவின் குழந்தையை தேவன் உயிர்ப்பிக்க; 12 வருடங்களுக்கு மேலாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் சமித்திபான் மற்றும் ஹீனாபானுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; மூளையிலுள்ள கட்டிக்கு சிகிச்சைப் பெற்று வரும் மிஷனெரியின் தாயாருக்கு தேவன் சுகமருள; பாலக்பாடா, பாய்ரியா, பிஷ்தான் ஆகிய பகுதிகளில் ஊழியத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜாஸ்மின் ஜுபராஜ்

## பீஹார்

**ராணிகஞ்ச் & அரரியா: தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** பிசாசின் பிடியிலிருந்து பூணம் தேவி மற்றும் சஞ்சன் தேவி ஜெபத்தினால் விடுதலை பெற்றனர். ரிங்கு ரிஷிதேவ் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தன் விசுவாசத்தை அறிக்கை செய்தார். டெதி, கட்மை, கஜ்பி, ஜெய்பிரகாஷ் நகர் ஆகிய இடங்களில் தடையின்றி ஆராதனை நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்த புற்றுநோயிலிருந்து புதிய தொடர்பாளரான பப்லு ரிஷிதேவ் அற்புத சுகம்பெற; குழந்தை இறந்தே பிறந்ததால் மிகுந்த துயரத்திலிருக்கும் விசுவாசி ரிமுதேவிக்கு தேவன் ஆறுதல் தர; குறைந்த இரத்த அழுத்தத்தினால் கஷ்டப்படும் கென்டுலா தேவியை தேவன் குணப்படுத்த; நமது விசுவாசிகளுக்கு இடையூறு விளைவிக்கும் உள்ளூர் போதகர்கள் மனந்திரும்ப; சல்தேவ், ரிஷிதேவ் மற்றும் பின்டு ரிஷிதேவின் குடும்பத்தினர் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

**சாந்தோபானி:**

**ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி**

**துதிக்க:** அநேக கிராமங்களில் பின்தொடர்ப்பணி செய்யவும், இரண்டு இடங்களில் படக்காட்சி ஊழியம் செய்யவும் தேவன் உதவி செய்தார். ராம்சந்திரா ராய் & சனிச்சார்யா ராய் ஆகியோர் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்து வருகிறார்கள். சுதேச ஊழியரின் மகன் இம்மானுவேலுக்கு காலில் ஏற்பட்ட பெரிய காயம் ஜெபத்தின் மூலம் குணமானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லோக்யா டெபியின் பெலவீனங்கள் நீங்கி ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; டைபாய்டு காய்ச்சலிலிருந்து கரீன் குணமடைய; மன அழுத்தத்திற்கு சிகிச்சைப் பெற்றுவரும் பிரேம்ராய் பூரண சுகம்பெற; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ரோஹன் ராய் அற்புத சுகம்பெற; தேஸி புஜார் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

### ஸ்தோத்திர பலி

*மஹாராஷ்டிரா மாநிலம், தலோடா பணித்தளத்தைச் சேர்ந்த வீணா பாய் ஐந்து வருடங்களாக பிசாசின் பிடியில் பாதிக்கப்பட்டு காட்டில் சுற்றித் திரிந்தாள். அவளது பெற்றோர்கள் விடுதலை வேண்டி பல இடங்களுக்கு அழைத்துச் சென்றும், அதிக பணம் செலவழித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. முடிவாக நமது விசுவாசிகளின் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டபோது விசுவாசிகள் அவருக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் அற்புத விடுதலை அருளினதால் தனது வீட்டில் ஸ்தோத்திர ஜெபக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தார். அக்கூட்டத்திற்கு தனது உறவினர்களை அழைத்திருந்தார். இதில் பங்குபெற்ற அவரது உறவினர்கள் சுவிசேஷம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.*




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ராணி ஜெஸிலெட் பால் ஆல்பர்ட்

## டோனி பிச்சக்கனி CDC:

### டிங்கு ஜெமே & இலா ஜெமே

**துதிக்க:** மூன்று இடங்களில் ராஜ்மஹால் ஆரம்பப்பள்ளி கட்டுமானப்பணி முடிக்கப்பட தேவன் உதவி செய்தார். வி.பி.எஸ். ஆசிரியர் பயிற்சி மற்றும் 21 மையங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற்றது. அநேக வருட ஜெபத்திற்குப்பின் அரசாங்கத்தின் மூலம் பொச்சோகுடியா கிராமத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கப்பட தேவன் கிருபை செய்தார். வேதவசனப் போட்டியில் பிள்ளைகள் உற்சாகத்துடன் பங்குபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் முதல் குழந்தையை இழக்கக் கொடுத்துள்ள ஆசிரியர் பிமோலா & வில்சன் மால்டோ குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அருள; அனைத்து மையங்களுக்கும் தேவையான பொருட்களை எடுத்துச்செல்ல தேவைப்படும் நான்கு சக்கர வாகனத்தை தேவன் தந்தருள; 21 ஆரம்பப் பள்ளி மையங்களில் பணி செய்யும் 77 சுதேச ஆசிரியர்கள் மற்றும் 44 சமையல்காரர்களின் சரீர சுகம் மற்றும் ஆவிக்குரிய வாழ்விற்காக; ஆறு மையங்களுக்கு தேவைப்படும் ஆங்கில ஆசிரியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## அமலகாச்சி:

### கஜன் சம்பிரமரி & ரோஷிலா

**துதிக்க:** சாந்துபஹாடி கிராமத்தில் தினமும் மாலை நடக்கும் கூட்டத்தில் கிராமத்தினர் உற்சாகத்துடன் கலந்துகொள்கின்றனர். சாலை விபத்திலிருந்து ஊழியர்களை தேவன் பாதுகாத்தார். சாந்துபஹாடி கிராமத்து கிறிஸ்தவர்களை வெறுத்து வந்த மந்திரவாதி உள்ளத்தில் தேவன் மாற்றத்தை தந்துவருகிறார். மேளாவுக்கு சென்று திரும்பும் வழியில் விபத்தை சந்தித்த விசுவாசிகளை சிறுகாயங்களுடன் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தோர் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; சபை மூப்பரின் மனைவி சலோமி உயர் இரத்த அழுத்தத்திலிருந்து சுகம்பெற; திருமணமாகி 20 வருடங்களுக்குப் பின் பிறந்த குழந்தை இறந்துபோனதால், மிகுந்த துயரத்தோடிருக்கும் சபை மூப்பர் சாமுவேல் பஹாரியாவின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்க; தடேபஹார் கிராமத்தில் கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போரை தடைசெய்யும் மந்திரவாதி மனந்திரும்ப; சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து மிஷனெரி சம்பிரமரி மற்றும் உயர் இரத்த அழுத்தத்திலிருந்து அவரது மனைவி ரோஷிலா சுகம்பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் ரோஞ்ஜய் நர்சாரி

**அமரபாடா:**

**வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** காளிடோகா ஆலயக் கட்டு மானப்பணி முடிவடைந்து, பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். திளைப்பாரா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. பக்கவாதத்திலிருந்து உக்கில் முர்மு, வலிப்பிலிருந்து பாபுலால் டுடு, பாம்பு கடியிலிருந்து சுனிதா சோரன் & தோன்முனி டுடு ஆகியோருக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கள்ள போதகத்தினால் விசுவாசிகளை திசைதிருப்பும் சுனில் ஹன்ஸ்தா, முன்ஷி ஹெம்ரோம், புடான் டுடு ஆகியோர் மனந்திரும்ப; தும்பாசீர், பச்சுவாரா, பாபுடோஹா ஆகிய கிராமங்களில் தடையின்றி ஆலயக் கட்டுமானப்பணி நடைபெற; கணவனை இழந்துள்ள ஹொபான்பிட்டி முர்முவை இரவு நேரங்களில் தொல்லைதரும் தீயோரிடமிருந்து தேவன் பாதுகாக்க; நிமோனியாவிலிருந்து ஜாய் மராண்டி மற்றும் அப்பெண்டிக்ஸ் அறுவை சிகிச்சையிலிருந்து சுரேஷ் முர்முவுக்கு தேவன் சுகமருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து மனோஜ் டெஹ்ரியை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

**கரோனி: ஏல்முல்வார் சுவப்னில் ராமலு & தட்வி மனிஷா**

**துதிக்க:** மூன்று நாட்கள் நடைபெற்ற சிறுவர் முகாமில் அனைத்து பணித் தளங்களிலிருந்தும் சுமார் 180 பிள்ளைகள் உற்சாகத்தோடு கலந்துகொண்டனர். கண்ணில் தொற்று ஏற்பட்டு அவதியுற்ற துர்கா டெஹ்ரி ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். சபை மூப்பர் மஹாதேவ் டெஹ்ரியின் குடும்பத்தில் சுகவீனப்பட்ட அனைவரையும் குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக நாட்கள் வயிற்று வலியினால் பாதிக்கப்பட்டு மிகவும் பெலவீனமாயிருக்கும் ரஞ்சித் டெஹ்ரியை தேவன் குணப்படுத்த; புதிய விசுவாசி பிரதீப் குமார் டெஹ்ரியின் குடும்பம் விசுவாசத்தில் வேரூன்றி வளர; பசித்குண்டி, நிம்டங்கா, கோல்பூர், நமோதி ஆகிய இடங்களில் ஆலயம் கட்ட இடம் கிடைக்க; பெற்றோருக்குக் கீழ்படியாமல், ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள மறுக்கும் ஆமோஸ் டெஹ்ரி மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *தேவனால் எல்லாம் கூடும்*

*பஞ்சாப் மாநிலம், பட்டாலா பணித்தளத்தி லுள்ள ஜோகன் நகல் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி பரம்ஜித் (35 வயது). மூன்று குழந்தைகளுக்குத் தாயான இவள் பயங்கரமான விபத்தில் சிக்கி தலை இரண்டாகப் பிளந்தது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது மருத்துவர்கள் அவளை காப்பாற்ற முடியாது என்று கைவிரித்தனர். விசுவாசிகள் அவளுக்காக கண்ணீரோடு ஜெபித்தபோது, ஜெபத்தைக் கேட்ட தேவன் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய முன்வரும்படி கிருபை செய்தார். சபையாரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சை நல்லபடியாக முடிந்து ஜோகன்நகல் சுகம் பெற்று வீடு திரும்பினாள். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கவிதா திம்மேஷ்
திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட்

### பாக்குரியா: இம்மானுவேல் முர்மு & நிலா ஹஸ்தா

**துதிக்க:** அநேக விசுவாசிகள் டைபாய்டு மற்றும் மஞ்சள்காமாலை வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். இரண்டு இடங்களில் நடைபெற்ற சிறுவர் கூட்டத்தில் கலந்துகொண்ட சிறுவர்கள் வேத வசனங்களை உற்சாகத்தோடு மனனம் செய்கின்றனர். வாலிபர் முகாம், ஜெபக்குழுத் தலைவர்கள் கூட்டம், சிறுவர் மேளா யாவும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநிலை பாதிப்பிலிருந்து பக்குலு டுடு, ரூபன் ஹெம்ரோம், சுந்தரி முர்மு ஆகியோரையும், பக்கவாதத்திலிருந்து சோனோட் டுடு, மாலை கண் நோயிலிருந்து ராணி மராண்டி, தொழு நோயிலிருந்து பூல்முனி முர்மு ஆகியோரையும் தேவன் குணப்படுத்த; சந்தாபூர் கிராமத்தில் ஊழியத்திற்கு இடையூறு செய்து விசுவாசிகள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள தடைசெய்து வரும் லொக்கிராம் ஹஸ்தக் மனந்திரும்ப; சபை மூப்பர் ஜேக்கப் டுடுவின் நிலப்பிரச்சனை விரைவில் முடிவுக்கு வர; பிலிப் ஹஸ்தக் குடும்பம் உற்சாகத்தோடு தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்ய ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** இரண்டு நாட்களாக காணாமல் போன திவான் முர்முவின் மாடு ஜெபத்தின் மூலம் திரும்ப கிடைத்தது. விசுவாசிகளின் வயல்களில் தேவன் நல்ல விளைச்சல்களை தந்தார். கால் எலும்பு முறிந்து பல மாதங்களாக நடக்க முடியாமலிருந்த சஞ்சலி கிஸ்குவுக்கு தேவன் சுகமருளினார். வியாதிகளினால் பாதிக்கப்பட்ட ஊழியர் குடும்பங்களை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன் தங்கை மற்றும் அவரது கணவரை ஒரே வாரத்தில் இழந்துள்ள ஊழியர் சார்லஸ்க்கு தேவன் ஆறுதலை தந்தருள; ஒரு வருடத்திற்கும் மேலாக வியாதியினால் துன்புறும் சபை மூப்பர் ஹொப்னா மராண்டிக்கு தேவன் அற்புத சுகமருள; குடல் அறுவை சிகிச்சையின் போது மருத்துவர்களின் தவறுதலால் ஒன்றரை வருடத்திற்கு மேலாக படுக்கையில் அவதிப்பட்டு வரும் ஸ்ரீமதி முர்முவுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

### ஊழியமே பிரதானம்

*உத்தரப்பிரதேசம், பஸ்தி பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி அம்ரேஷ். சிறு கடை நடத்தி வரும் அவருக்கு தனது குடும்பத்தின் தேவைகளை சந்திப்பதே கடினமாக இருந்து வந்தது. இச்சூழ்நிலையில் தனது கிராமத்திற்கு பழைய சைக்கிளில் வந்து ஆராதனை நடத்திச் செல்லும் தன்னார்வ ஊழியருக்கு எப்படியாகிலும் ஒரு புதிய சைக்கிள் வாங்கித் தரவேண்டும் என்ற வாஞ்சை அவருக்குள் ஏற்பட்டது. எனவே அவர் அதிக பிரயாசத்துடன் சிறுக சிறுக பணம் சேர்த்து தேவனுடைய ஊழியத்தை செய்யும் தன்னார் ஊழியருக்கு ஒரு புதிய சைக்கிளை மகிழ்ச்சியுடன் வாங்கி கொடுத்தார். தேவனுக்கே மகிமையும் கனமும் உண்டாவதாக!*

உபவாச
ஜெபநாள்




## பர்ஹர்வா மெர்சி சிறுமியர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன் & விமலா, வசாவா அருணாபேன், சிங் நய் சியான்**

**துதிக்க:** வாலிபர் முகாமில் கலந்து கொண்ட நமது விடுதிப் பிள்ளைகள் இரட்சிப்பின் அனுபவத்தை புதுப்பித்துக் கொண்டனர். நவநீதர் அண்ணன் கூடுகையில் நமது பிள்ளைகள் ஊழியத்திற்கென்று தங்கள் வாழ்வை ஒப்புக்கொடுத்துள்ளனர். சோனால் ஹன்ஸ்தா வலிப்பு வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றாள். கடந்த மாதத்தில் காலசூழ்நிலை காரணமாக சுகவீனப்பட்ட 65க்கும் மேற்பட்ட விடுதிப் பிள்ளைகளை தேவன் குணமாக்கினார். விடுதிக்குத் தேவையான ஜெனரேட்டர் மற்றும் டிரான்ஸ்பார்மர் ஆகியவற்றை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் பணிபுரிய அர்ப்பணமுள்ள வார்டன் மற்றும் ஆசிரியர் கிடைக்க; செவிலியர் படிப்பை படித்துவரும் ஆல்பின் சோரன் மற்றும் சுசிலா மரண்டிக்கு தேவையான ஞானத்தை தேவன் அருள; அடிக்கடி வியாதிப்படும் ஆல்பினா, பேட்டி கிஸ்கு, சாந்தி மராண்டி ஆகியோரை தேவன் குணப்படுத்த; விடுதி சமையல்காரர் பாபுலால் சோரன் குடும்பத்திற்கு தேவன் புத்திர சந்தானம் அருள ஜெபிப்போம்.

## மணிகா:

**வேதமாணிக்கம் அப்பாதுரை & ஜெப தெபோராள்**

**துதிக்க:** குமரெஹி கிராமத்தைச் சேர்ந்த பிரியதம் குமாரி ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். துவாரிகா கிராமத்தைச் சேர்ந்த கிரண் தேவி 15 ஆண்டுகளுக்குப்பின் ஜெபத்தின் மூலம் கர்ப்பம் தரிக்க தேவன் கிருபை செய்தார். வாலிபர் பயிற்சியில் கலந்துகொண்ட சிலர் ஆலய ஆராதனையை நடத்தி வருகிறார்கள். நம் விசுவாசிகளில் பலர் விஷப்பாம்பு கடியிலிருந்து அற்புதமாய் பாதுகாக்கப்பட்டபடியால் தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ள வினிதா தேவி, கரிஷ்மா குமாரி, ரிங்கு தேவி ஆகியோரை தேவன் குணப்படுத்த; கல்லீரல் பிரச்சனையிலிருந்து புதிய விசுவாசியான சீமா தேவி மற்றும் எட்டாவது முறையாக காச நோய்க்கு சிகிச்சை பெற்று வரும் சனிச்சார் சுகம்பெற; விசுவாச பின்மாற்றத்தி லிருந்து ரூபி தேவி மீண்டும் விசுவாசத் திற்குள் வர; லக்கன், அண்டு புய்யான், சஞ்சய் புய்யான், சிவசங்கர் ராம், சதன் புய்யான், அஜய் புய்யான், மண்டு புய்யான், ராம்ஜனம் புய்யான், பீரேந்திரா பார்த்தி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**18**
**டிசம்பர்**
**வியாழன்**

# மேற்கு வங்காளம்

## மால்டா:

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** விபத்திலிருந்து மிஷனெரி குடும்பத்தை தேவன் பாதுகாத்தார். நான்கு பேர் இயேசுவின் மந்தையில் இணைந்துள்ளனர். பெலவீனங்களிலிருந்து அபிஜி பஹாரியா மற்றும் ரீனாவுக்கு தேவன் சுகமருளினார். சித்தல் பூர் கிராமத்தில் ஜெபத்தின் மூலம் அநேகர் பிசாசின் பிடியிலிருந்து விடுபடவும், வியாதியிலிருந்து சுகம்பெறவும் கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள சுதேச ஊழியர் மற்றும் தன்னார்வ ஊழியர்களின் பயிற்சி மிகுந்த பலனைத் தர; மால்டா மாவட்டத்தில் பரவி வரும் மஞ்சள்காமாலை மற்றும் டைபாய்டு நோய்களிலிருந்து நமது விசுவாசிகள் மற்றும் ஊழியர்களையும், புயல் வெள்ளத்திலிருந்து விசுவாசிகளின் விளைநிலங்களையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## இட்டாஹார்:

### சாலமோன் ஏ & சுகந்தி

**துதிக்க:** ஆறு இடங்களில் இரவு கூடுகை நடத்தவும், புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும் தேவன் கிருபை செய்தார். ஐந்து மாதங்களாக இரத்த கழிசலினால் அவதியுற்ற சுக்லால் மராண்டி, படுத்தபடுக்கையிலிருந்த முனி சோரன் ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். இரண்டு கிராமங்களில் நடைபெற்ற வாலிபர், சபை மூப்பர், சிறு குழுத் தலைவர்களுக்கான பயிற்சிகள் யாவும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உத்தர்தினாஜ்பூர் மாவட்டத்தில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிட; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஹோப்னா கிஸ்கு, போரோட் முர்மு, மொஜ்லா முர்மு, ஜர்மோன் மராண்டி, சுசுட் மராண்டி ஆகியோர் மனந்திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட; தன்னார்வ ஊழியரான சகோதரி மெல்கோ சோரன், சபை மூப்பரான சகோதரி அரோட்டி சோரன் மற்றும் அவரது தங்கைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; குடும்பத்தினரால் தனித்துவிடப்பட்ட புதிய விசுவாசி புட்டு முர்மு பக்கவாதத்திலிருந்து பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## *கைவிடாத கர்த்தர்*

*பஞ்சாப் மாநிலம், அம்ரித்சர் பணித்தளத்தின் பல்லா கிராமத்தைச் சேர்ந்த ககன்தீப் கௌர் கணவனால் கைவிடப்பட்டு கருப்பைப் புற்றுநோயினால் அவதியுற்று வந்தாள். கடுமையான வயிற்று வலி, காய்ச்சல், பசியின்மை இவைகளோடு அசுத்தாவியின் போராட்டத்தினாலும் கஷ்டப்பட்டு வந்தாள். ஊழியர்கள் அவளை சந்தித்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அனைத்து சுகவீனங்களிலிருந்து சுகமருளியதோடு அசுத்தாவியின் பிடியிலிருந்தும் விடுதலை அருளினார். ககன்தீப் ஞாயிறு ஆராதனையில் தனது சாட்சியைக் கூறி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினாள். மேலும் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகி வருகிறாள். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா டேவிட் மஸிஹ்

## பாலூர்ஹட்:

### தீப்ரத்னா & மித்திலேஷ்

**துதிக்க:** ஜோனத்தான் முர்மு ஆண்டவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கடந்த மாதத்தில் அனைத்து ஊழியங்களும் தடையின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். தாராபாடா கிராமத்தில் நடைபெற்ற முழுஇரவு ஜெபத்தில் கலந்துகொண்ட மின்டி ஹெம்ரோம் மற்றும் அவளது மருமகள்கள் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் படல்பூர், டாங்கி, தடுகேடோலா, தாரஜ்பூர், போலிடங்கா, கோயிரங் கிராம மக்கள் இயேசுவை முழுமனதுடன் விசுவாசிக்க; ஜடாய் கிராமத்தில் ஊழியத் திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந் திரும்ப; சபை மூப்பர்களும், விசுவாசிகளும் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; சுதேச ஊழியர் சாம்சன் ஹன்ஸ்தா குடும்பத்தை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## பாக்குவாஹாட்:

### தீஹே ஜேம்ஸ் & சரணி

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் விசுவாசத்தில் பின்தங்கிய நான்கு பேர் தற்போது ஆலய ஆராதனையில் மகிழ்ச்சியோடு கலந்துகொள்கின்றனர். ஜெபத்தைக்கேட்ட தேவன் அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர் பிரிடன் டுடு குடும்பத்தைத் தந்துள்ளார். விபத்துகளுக்கும், வியாதிகளுக்கும் ஊழியர்களை விலக்கிப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் தங்கள் சாட்சிகளின் மூலம் அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த; புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தடையாயிருக்கும் குடிப்பழக்கம், மூடப்பழக்கங்கள் மற்றும் எதிர்ப்புகள் மறைய; விசுவாசிகளை திசைதிருப்பும் கள்ள போதகர்கள் மனந் திரும்ப ஜெபிப்போம்.

# சத்தீஸ்கார்

## சம்பா:

### வினோத்குமார் சிங் & பிரவதிமணி

**துதிக்க:** சோர்பட்டி கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க தேவன் கிருபை செய்தார். எதிர்ப்பாளர்கள் ஆராதனையை தடைசெய்தபோதிலும் தேவன் கிருபையாய் பாதுகாத்து தொடர்ந்து ஆராதனை நடைபெற உதவி செய்தார். ஆறு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். இரண்டு நாள் நடைபெற்ற மேளாவில் அநேகர் கலந்துகொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயங்கள் இல்லாத கிராமங்களில் விரைவில் ஆலயங்கள் கட்டப்பட; எதிர்ப்புகள் பெருகி வரும் இந்நாட்களில் விசுவாசிகளும், சுதேச ஊழியர்களும் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; விசுவாசத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாயிருப்போர் தொடர்ந்து ஆவிக்குரிய வாழ்வில் வளர; நடைபெறவிருக்கும் ஊழியங்கள் அனைத்தும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேவ கிருபை விஜய் பாபு

## ஹட்டி:

### தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** கிராரி, கிட்க்வாரி, லாபேட் ஆகிய கிராமங்களில் அநேகர் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். இரண்டு கிராமங்களில் மூன்று நாள் உபவாச ஜெபம் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். அநேக வருட ஜெபத்திற்குப்பின் ஜக்தீஸ், சார்த்தி குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். விசுவாசி தேஜோவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்தருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து நந்து ரத்தியாவுக்கு தேவன் விடுதலை அருள; பக்கவாதத்திலிருந்து சக்கேல் சிங் சுகம்பெற; தீயப்பழக்கத்தி லிருந்து சத்தியம், பல்ராம் ஆகியோர் விடுதலை பெற; ரத்தியா மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; மிஷனெரிகள் தங்கி ஊழியம் செய்ய வாடகைக்கு நல்ல வீடு கிடைக்க; மிஷனெரிகளின் வயதான பெற்றோருக்கு தேவன் சுகபெலன், பாதுகாப்பு அருள ஜெபிப்போம்.

## பாலி:

### டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்

**துதிக்க:** பீம்சேனா இயக்கத்தினர் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர். கஞ்சன்பூர் கிராமத்தில் நடைபெற்ற ஆத்தும ஆதாயப் பயிற்சியில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த விசுவாசிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இருசக்கர வாகன விபத்திலிருந்து மிஷனெரி குடும்பம், சுதேச ஊழியர் பஹோரன், விசுவாசி மோத்திராம் ஆகியோர் அற்புதமாக பாதுகாக்கப்பட்டனர். மூன்று வாரங்களாக மனநோயினால் அவதியுற்ற சிவகுமாரி உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது பூரண சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு பெற்றோரை மிரட்டி வரும் மோஹன் மற்றும் சுரேஷ் மனந்திரும்பி பெற்றோருக்கு கீழ்படிந்து நடக்க; கர்த்-பச்சாலி, சபோரா, ஷிவ்பூர், சல்கி, புக்பாரா, சிர்பானி, பைன்ஷாஜர், போண்டி மற்றும் பாரேமுடா கிராமங்களில் நற்செய்திக்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; கிறிஸ்தவர்களுக்கு இடையூறாக இருக்கும் பூசாரி சோம்நாத் மனந் திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட; மனநலப் பிரச்சனை யிலிருந்து சமரோ, டைபாய்டு மற்றும் மஞ்சள்காமாலையிலிருந்து ராஜ் குமார், செரிமானப் பிரச்சனையிலிருந்து மணிராம் ஆகியோர் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.




## ஒடிசா

### ரிமுலி:

**அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்**

**துதிக்க:** கொக்கோனா கிராமத்தைச் சேர்ந்த கோபி முண்டாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். தஸ்மா பெங்கரா மற்றும் மோசஸ் பிருவாவை டைபாய்டு காய்ச்சலிலிருந்தும், இம்மான்சு மற்றும் லினா பெங்கராவை சளி, காய்ச்சலிலிருந்தும் தேவன் குணப்படுத்தினார். சென்னை ஜெபக்குழுக்களில் உத்கல் பிராந்திய ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ள ஊழியர்களுக்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாமு முண்டாவின் மகன் சிமியோனின் தலையிலிருக்கும் கொப்புளங்களை தேவன் குணப் படுத்த; பட்டிபிலா கிராமத்தைச் சேர்ந்த கார்த்திக்கின் மகன் ராஜா தீய நண்பர்களை விட்டு தேவனிடம் திரும்ப; அறுவடை நாட்களில் விசுவாசிகளின் விளைச்சல்களை காட்டு யானைகளிடமிருந்து தேவன் பாதுகாக்க; பருவமழையின் காரணமாக ஏற்படும் தொற்று நோய்களிலிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

### பிஜடாலா:

**ஷிவ்சங்கர் & காந்தி தேவி**

**துதிக்க:** ஏழு இடங்களில் இரண்டு நாள் உபவாச ஜெபம் சிறப்பாக நடைபெற்றது. குஞ்சுகொச்சா கிராமத்தில் விசுவாசியின் அடக்க ஆராதனையை எவ்வித பிரச்சனையுமின்றி நடத்த தேவன் கிருபை செய்தார். லக்ஷ்மி பெஸ்ரா, துலாரி ஹெம்ரோம், லுக்கி சோரன் ஆகியோர் மனநோயிலிருந்து தேவ கிருபையால் சுகம்பெற்றனர். ஏழு பேர் தேவனை விசுவாசித்து அவருடைய மந்தையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சால்கே சோரன் காச நோயிலிருந்தும், ஷார்ப் டுடு புற்றுநோயிலிருந்தும், சம்பா நாயக் மனநோயிலிருந்தும், சுராய் டுடு கடுமையான வயிற்று வலியிலிருந்தும் சுகம்பெற; லக்ஷ்மி ஹெம்ரோமுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; பந்தா, குடுரியா, மணிக்பூர், குஞ்சுகொச்சா, லோசாடி, சண்டிகமன், தோடாசாய், மணிசௌக், பெல்பஹாடி, கிஜிரியா, கோடி, பாலுஜோடி, சாம்புடா, லொஹகானி ஆகிய கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




## குஜராத்

### அஹ்வா:

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் ஆனந்தி பென் இரத்த வாந்தி மற்றும் சுவாச பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றார். மொகுபாடா கிராமத்திலுள்ள பானு பென் புற்றுநோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறார். திருமணமாகி 12 வருடங்களுக்குப்பின் ஜாய்சம் பாய் & பன்னிலா குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளி ஆசீர்வதித்துள்ளார். சீதாராம் பாய் மற்றும் குண்டா பென் பக்கவாதத்தி லிருந்தும், மோஹனா பென் கண் பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். பாம்பு கடியி லிருந்து மந்தா பெனை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு வயது ஜாஷ்னா பென் விரைவில் எழுந்து நடக்கும்படி தேவன் கிருபை செய்ய; விபத்தினால் கை எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள வினேஷ் பாய் விரைவில் குணமடைய; மனநிலை பாதிப்பிலிருந்து ரமேஷ் பாயை தேவன் குணப்படுத்த; கடும் மழை வெள்ளத்தினால் விசுவாசிகளின் வயல்நிலங்கள் பாதிக்கப்படாதபடி தேவன் பாதுகாக்க; புற்று நோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் ஹரிதா பென் பூரண சுகம்பெற; கட்டிக்காக அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ள ரகுபாயின் பயாப்சி பரிசோதனையில் அது சாதாரண கட்டியாக இருக்க ஜெபிப்போம்.

### வசாவி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

**தெபோரா விஜயராணி**

**துதிக்க:** 1 நாளாகமம் 24-29 அதி காரங்கள், 2 நாளாகமம் 1ஆம் அதி காரம் மொழி பெயர்க்கப்படவும், சரிபார்க்கப்பட்ட 1 சாமுவேல் 18-31 அதிகாரங்கள் திருத்தி கணினியில் ஏற்றப்படவும் தேவன் உதவி செய்தார். கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்த கட்காச் சபை விசுவாசி காலி பென் தொடர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். மழை நாட்களில் பரவி வந்த தொற்று வியாதிகளுக்கும், விஷப் பூச்சிகளுக்கும் விசுவாசிகளை விலக்கி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இம்மாதம் செய்யவிருக்கும் 2 நாளாகமத்தின் மொழி பெயர்ப்புப் பணிக்காக; வசாவி வேதாகம மூத்த மொழிப்பெயர்ப்பாளர் ராஜேந்திரன் அண்ணன் மற்றும் மொழி பெயர்ப்பில் உதவி செய்யும் தேவ்ஜிபாய் வசாவின் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சோமி பென் இடுப்பு வலியிலிருந்தும், மஞ்சு பென் தலை சுற்றிலிருந்தும் சுகம்பெற; கஜ்ரி பெனின் மகள் கல்பேஷ் ஆலய ஆராதனையில் குடும்பமாய் கலந்துகொள்ள ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. அர்ச்சனா மோகன்

### மாண்சா:
### செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** பூணம் பெனுக்கு சுகப் பிரசவத்தின் மூலம் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். காவல் துறையில் பணிசெய்யும் விசுவாசி பிரியங்கா பெனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்துள்ளார். கலாத்ரா கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டுள்ளார். மங்கஜ் பாய் மற்றும் அவரது மனைவி சுசிலா பென் வாஞ்சையோடு நற்செய்தி கேட்டனர். பட்டேல் என்பவரது வீட்டில் ஞாயிறு ஆராதனையைத் துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோயிலிருந்து பார்வதி பென் & சஞ்சய் பாய் பட்டேல், மன அழுத்தத்திலிருந்து தக்ஷா பென் ஆகியோர் விடுதலை பெற; பாம்பு கடியினால் ஏற்பட்டுள்ள புண்ணிலிருந்து புஞ்சாராம் பாய் சுகம்பெற; பார்மர், வகாரி, பட்டேல், தாக்கூர், சென்மா, ராவல் ஆகிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; மங்கஜி பாய், சம்பா பென் மற்றும் அவர்களது மகன்கள் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; சந்தன் பென் மற்றும் நவீன் பாய்க்கு தெளிவான பார்வையை தேவன் அருள ஜெபிப்போம்.

### சூரத்:
### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட குஷூம் கிரமமாக ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகிறார். நிஷா பெனை பெரிய விபத்திலிருந்து தேவன் அற்புதமாக பாதுகாத்தார். ஜமுனா பென் கடுமையான நெஞ்சு வலியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். தன்ஜி பாய்க்கு ஏற்ற வேலையை தேவன் தந்தருளினார். 20 நாட்களாக படுக்கையிலிருந்த ஈமு பாய்க்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர; தங்கள் மகளை இழந்துத் தவிக்கும் ஜமுனா பென் & சுர்ஜி பாய்க்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் கட்டளையிட; பண்டைச்சாரா பகுதியில் தடையின்றி தொடர்ந்து ஞாயிறு ஆராதனை நடைபெற; பல்சானா மற்றும் நௌசாரி பகுதிகளில் செய்யப்படவிருக்கும் ஊழியம் மிகுந்த பலனைத் தர; சபை மூப்பர், பெண்கள், வாலிபர்களுக்கான கூட்டங்கள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

உபவாச
ஜெபநாள்




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வேணி ஜாண்
செல்வி. சிப்பாரா ஜெனா

## மெஹ்சானா:

**சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி**

**துதிக்க:** முழங்கால் வலியினால் நடக்கமுடியாமல் படுக்கையிலிருந்த ஆனந்தி மாசி ஜெபத்தின் மூலம் நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். மன அழுத்தத்திலிருந்து சோனல் பென் சுகம் பெற்று தன் வேலையைத் தொடர தேவன் உதவி செய்தார். ஃபுடேடா கிராமத்தில் நடைபெற்ற தேடுவோர் முகாமில் அநேகர் சுவிசேஷம் கேட்க தேவன் கிருபை செய்தார். நற்செய்திக்கு வாஞ்சைக் காட்டும் ஆகாஷ் மற்றும் கமலுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மெஹ்சானா பணித்தளத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; பலன்பூர் பகுதியில் ஊழியம் விரிவடைய எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; ஆகாஷுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; கீதா பென், லக்ஷ்மண் பாய், வர்ஷா பென், கோகிலா பென், சோனி பென், பர்மர் பென், பிந்து பாய், தினேஷ் பாய் ஆகியோர் தேவனை விசுவாசிக்க; பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள சோனா பெனுக்கு தேவன் சுகமருள; விதவை விசுவாசியான சந்திரிகா பெனுக்கு தேவன் நல்ல வேலையை அருளவும், அவரது பிள்ளைகளின் படிப்பு மற்றும் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## மோட்டாபண்டா:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** கோபோர்லி கிராமத்தைச் சேர்ந்த மின்சார துறையில் வேலை செய்யும் சஞ்சய் பாய் 15 அடி உயரத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி கீழே வீசப்பட்ட நிலையில் தேவன் அற்புதமாய் அவரது ஜீவனை பாதுகாத்தார். இவ்வருட அறுப்பின் பண்டிகையை அனைத்து விசுவாசிகளும் உற்சாகத்தோடு கொண்டாடி தேவனுக்கு நன்றி செலுத்தினர். மழைக்காலத்தில் பரவி வந்த தொற்று நோய்களுக்கு விசுவாசிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர் முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள் தொடர்ந்து தேவனுக்கென்று சாட்சிகளாய் வாழ; வேலையின்றி தவிக்கும் சபை வாலிபர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை தேவன் கட்டளையிட; விசுவாசத்தில் பின்தங்கியிருப்போர் மீண்டும் தேவனண்டை திரும்ப; திட்ட மிட்ட இலக்கினை நிறைவேற்ற ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சலோமி மால்டோவின் காலில் ஏற்பட்டுள்ள ஒவ்வாமை நீங்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிபெனி ஜமி ஜான் இஜுங்

## போடோலி & தபோய்:

### ஏசுபாபு & உஷா

**துதிக்க:** கடந்த மாதம் விசுவாசிகள் அநேகரை விஷபாம்பின் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் டிம்லி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். உடல் முழுவதும் பருக்கலால் அவதிப்பட்ட சமீர் சிகிச்சை பலனளிக்காததால் ஆலயம் வந்து ஜெபித்த போது தேவன் அவனுக்கு பூரண சுகமருளினார். இரவில் திடீரென சுயநினைவிழந்த சந்தனபாயின் மகள் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றாள். தால்நகர் கிராமத்தில் நடைபெற்ற இரவு கூடுகையில் பூசாரிகளும், மதகுருக்களும் கலந்துகொண்டு வசனத்தைக் கேட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அக்குட்டா கிராமத்தில் அடிக்கடி சுயநினைவை இழந்து வரும் ரஞ்ஜித் வீட்டாரை தேவன் குணப்படுத்த; தன் மனைவியை இழந்து வாடும் சர்தார் பாய்க்கு தேவன் ஆறுதல் அளிக்க, மேலும் அவரும் அவரது மூன்று பிள்ளைகளும் விசுவாசத்தில் வளர; விசுவாசத்தினிமித்தம் கணவனால் உபத்திரவப்படும் மஞ்சுளாவை தேவன் பெலப்படுத்த, அவளை அவமானப்படுத்தும் கிராமத்தார் மற்றும் அவளது கணவர் இரட்சிக்கப்பட; பாடுவிபாய் என்பவர் வாட்ஸ்அப் குழுவை உருவாக்கி அதில் விசுவாசிகளுக்கு விரோதமாக பல தவறான செய்திகளை பரப்பி வருவதோடு, கிராம வாலிபர்களை விசுவாசிகளுக்கு விரோதமாக செயல்படவும் தூண்டி வருகிறார். இவர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## ஜலோத்:

### ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ் & ஏஞ்சல்

**துதிக்க:** மூவாடா கிராமத்தைச் சேர்ந்த சுக்ராம் பாய் குடும்பமும், ஜலாம்புரி கிராமத்தைச் சேர்ந்த மகேந்திர பாய் குடும்பமும் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். டைபாய்டு காய்ச்சலிலிருந்து வனிதா பென், நெஞ்சு வலியிலிருந்து சந்திரிகா பென், படுத்தபடுக்கையிலிருந்து டெர்சிங் பாய் ஆகியோருக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜலாம்புரி கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட; தினேஷ்பாய் மற்றும் பாயல் பென் குடும்பத்திற்கு தேவன் புத்திர சந்தானம் அருள; கல்பேஷ் பாய் பக்கவாதத்திலிருந்தும், மஞ்சுளா பென் புற்றுநோயிலிருந்தும், ராம்சிங் பாய் டைபாய்டிலிருந்தும் பூரண சுகம்பெற; சுமிதா பெனுக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்தருள; உஷாவின் சுகப் பிரசவத்திற்காகவும், அனில் பாய் தேர்வை நன்றாக எழுதவும், சின்மன் பாய் தொடர்ந்து ஆலயத் திற்கு வரவும், ஜலோத்தில் விடுதி கட்ட ஏற்ற நிலத்தை தேவன் தந்தருளவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்வாதி ஜெயபிரகாஷ்

# தாத்ரா & நகர் ஹவேலி

## சில்வாசா:

**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** ராந்தா சிறுவர் இல்லத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற வாலிபர் முகாமில் அநேகர் வாஞ்சையோடு கலந்துகொண்டு பயன்பெற்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து சவிதா பெனும், பாரு பெனின் மூன்று பிள்ளைகளும் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். மூல வியாதியிலிருந்து ஹேத்தல் பென், நிமோனியாவிலிருந்து அன்மோல் ஆகியோருக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயிலிருந்து சுதேச ஊழியரின் மகன் விஷ்வாஸ், இடுப்பு வலியினால் இரண்டு வருடங்களாக நடக்கமுடியாமலிருக்கும் சைத்தா பாய், மூல வியாதியிலிருந்து கஞ்சன் பென் ஆகியோர் பூரண சுகம்பெற; நீரில் மூழ்கி உயிரிழந்த 17 வயது சிநேஹலின் பெற்றோருக்கு தேவன் ஆறுதலைத் தந்தருள; சுமித்ரா பெனின் கழுத்திலுள்ள கட்டி நீங்கவும், வந்தனா பென் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுபடவும், கங்கிபென் தூக்கத்தில் நடக்கும் பழக்கத்திலிருந்து விடுபடவும் ஜெபிப்போம்.

## கான்வேல்:

**அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** பர்வாட் கிராமத்தைச் சேர்ந்த சாந்தி பென் கால் எலும்பு முறிவிலிருந்து ஜெபத்தின் மூலம் விரைவில் சுகம்பெற்றார். கின்னோலி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசியின் மகள் பாம்பு கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டார். கான்வேல் பணித்தளத்தில் நடைபெற்ற வாலிபர் முகாமில் 450க்கும் அதிகமானோர் கலந்துகொண்டதில் 19 பேர் தங்கள் வாழ்வை தேவனுக்கென்று அர்ப்பணித்தனர். நகர் கிராமத்தைச் சேர்ந்த பாலி பென் கர்ப்பப்பை கட்டி மற்றும் இரத்தசோகையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர் விக்கலினால் பால் குடிக்க முடியாமல் தவித்து வரும் தீபக் என்ற 6 மாத குழந்தைக்கு தேவன் அற்புத சுகமருள; மனநிலை பாதிப்பினால் வேதனைப்படும் ராஜிலி பென், மூன்று வருடங்களாக காச நோயினால் அவதிப்பட்டு, தற்போது நடக்கமுடியாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பௌனி பென், ஆஸ்துமாவினால் கஷ்டப்படும் நைனா பென், ரகுபாய், ரவினா பென் ஆகியோருக்கு தேவன் சுகமருள; உடல் வீக்கத்தினால் கஷ்டப்படும் கம்லி பெனுக்கு தேவன் சுகமருளி குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. ஸ்வேதா உப்தேஷ் குமார்
திருமதி. ஹேமலதா பால் ரவி ராஜ்

# மகாராஷ்டிரா

## போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். ஆறு கிராமங்களில் படக்காட்சி ஊழியம் செய்ய தேவன் உதவி செய்தார். விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட தரிசனக் கூடுகையில் 600க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். வயலில் வேலை செய்துகொண்டிருந்த சத்தீஷ் பாயை விஷ பாம்பு கடித்தபோது விசுவாசத்துடன் ஜெபித்த அவரை தேவன் ஆபத்தின்றி பாதுகாத்தார். ஏழு பேர் தேவனை விசுவாசித்து சபையில் இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநிலை பாதிப்பிலிருந்தும், அசுத்தாவியின் பிடியிலிருந்தும் ஷர்மிளா பாய், ஷீட்டல் பாய், பிராட்ரிக் பாய், ரான்சிங் பாய் ஆகியோரும், வாத நோயிலிருந்து புடியா, சஞ்சய், அப்பாபாய், லக்ஷ்மண் பாய் ஆகியோரும் பூரண சுகம்பெற; குடியின் அடிமைத்தனத்திலிருந்து மோஹன் பாய் & நர்சிங் பாய், சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து பட்டியா பாய் & பேபி பாய், வலிப்பு நோயிலிருந்து கிஞ்சல் மற்றும் மஞ்சள்காமாலையிலிருந்து மகேஷ்பாய், பக்கவாதத்திலிருந்து சச்சின், திவான் பாய், சுஷ்மா பாய், கவிதி பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## ராஜூர்:

### பசவராஜா & சன்மதா

**துதிக்க:** வனம் மற்றும் மலை வழிப் பிரயாணத்தில் ஊழியருக்கு தேவன் பாதுகாப்பை அருளினார். மஹாதேவ் கோலி மக்கள் மத்தியில் முன்னோடி மிஷனெரியாக பணிசெய்யும் வாய்ப்பை தேவன் தந்தருளினார். மிகுந்த சவால் களின் மத்தியில் தேவன் ஊழியர்களை பெலப்படுத்தினார். பிம்ரி கிராமத்தில் புதிய குடும்பங்கள் உற்சாகத்துடன் நற்செய்திக்கு செவிசாய்த்து வருகிற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஹாதேவ் கோலி மக்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்பு தலைத் தந்தருள; புதிய கிராமங்களில் தேவன் அநேக தொடர்பாளர்களை எழுப்பித்தர; புதிய ஆராதனைக் குழு துவங்கப்படுவதற்கு காணப்படும் தடைகள் நீங்க; தனிமையில் வசிக்கும் மிஷனெரிகளின் வயதான பெற்றோருக்கு ஏற்ற சுக பெலன் ஆரோக்கியத்தை தேவன் அருள; மிகுந்த சவால் நிறைந்த இப்பணித்தளத்தில் ஊழியம் செய்வதற்கு ஏற்ற பெலன், சுகம், மனவலிமை மற்றும் பாதுகாப்பை நமது ஊழியர்களுக்கு தேவன் அருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் மஸிஹ்

திருமதி. பாருடே சிலாபாய் ரடியா

## தடுகோன்: எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** தடுகோன் பகுதியில் கால் நடைகளுக்கு வைரல் காய்ச்சல் பரவி வந்தபோது நமது விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் தேவன் கால் நடைகளைப் பாதுகாத்தார். ஆவிக்குரிய கூடுகைகள், பயிற்சி கூடுகைகள் மழைக்காலத்திலும் தடையின்றி நடத்திட தேவன் உதவி செய்தார். தடுகோன், டூடல், கடுக்கியா ஆகிய ஆராதனைக் குழுக்களில் புதிதாக அநேகர் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வருவதால் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கென்று தங்களை அர்ப்பணித்துள்ள அரவிந்த் குடும்பம் மற்றும் பகத்சிங் தேவ் தங்கள் தீர்மானத்தில் உறுதியாயிருக்க; உம்டி, பட்டாலி, ஹாஜர்கேடி, நிக்டி ஆகிய கிராமங்களில் அசுத்தாவியின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளுக்கு தேவன் விடுதலை அருள; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் சுயாதீனப் போதகர்கள் மனந்திரும்ப; ஊழியத்திற்கு தடைகள் ஏற்படுத்தும் அந்தகார சக்திகளை தேவன் அதமாக்க; வாழ்வாதாரத்திற் காக சாராயம் விற்கும் விசுவாசிகளுக்கு மாற்று வேலைகளை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## தலோடா:

### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** அம்பாபானி கிராமத்தைச் சேர்ந்த பப்லி பாயை இரவில் விஷத் தேள் கடித்துவிட்டது. மருத்துவ வசதியில் லாத சூழ்நிலையில் முழகால்படியிட்டு ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். குடிப்பழக்கத்திலிருந்து விடுபடமுடியாமல் தவித்த கணேஷ் வசந்த் தாக்ரேக்காக ஊழியர்கள் ஜெபித்தபோது அவர் குடியிலிருந்து விடுபட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். விஷ பாம்பின் கடியிலிருந்து சைக்கா பாயை தேவன் பாதுகாத்தார். தொழு நோயினால் பாதிக்கப்பட்ட ஆஷி பாய்க்காக சுதேச ஊழியர் ஜெபித்தபோது அவருக்கு அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஐந்து மாதங்களாக பக்கவாதத்தினால் அவதியுறும் மோஹன்சிங்கை தேவன் குணப்படுத்த; விசுவாசத்தினிமித்தம் கணவரால் கைவிடப்பட்ட ஊர்மிளா பாயின் வாழ்க்கையில் தேவன் அற்புதம் செய்ய; வயிறு வீக்கத்தினால் நான்கு வருடங்களாக சரியாக நடக்கமுடியாமல் கஷ்டப்படும் கோமி பாய், கால் வலியினால் அவதிப்படும் பத்மா, கண் பார்வை பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுனில் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; கிராமத்தினரால் எதிர்ப்பை சந்தித்து வரும் ராய்சிங்கிற்கு தேவன் பாதுகாப்பு அருளவும், அவர் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத் திருக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மணிசெல்வி சாரதி

### சாலீஸ்காவ்:

**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** வாஹேல் கிராமத்தில் டைபாய்டு மற்றும் மஞ்சள்காமாலையினால் இரத்த அணுக்கள் குறைந்து கஷ்டப்பட்ட வினோத்பாவ் ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். காசநோயினால் அவதியுற்ற சோணுபாவ் மற்றும் ஆஸ்துமாவிலிருந்து காமினி ஆகியோருக்கு தேவன் சுகமருளினார். ராஜன்காவ், போர்னார், உப்கெட், போனோட்டி, மோல்டொங்காரி, சின்ச்காவ், பன்ரூட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். நடைபெற்ற விசுவாசிகள் முகாம் மற்றும் அனைத்து ஜெபக் கூடுகைகளில் புதிதாக அநேகர் கலந்துகொண்டு வேத வசனங்களை கேட்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆஸ்துமா மற்றும் உடல் வீக்கத்தினால் கஷ்டப்படும் உக்கா, டைபாய்டு மற்றும் நெஞ்சு வலியினால் அவதிப்படும் அல்கா ஆகியோரை தேவன் குணப்படுத்த; அசுத்தாவியின் பிடியினால் தூங்க முடியாமல் கஷ்டப்படும் சம்தனுக்கு தேவன் விடுதலை அருள; ஆண்டவரின் அற்புத சுகத்தை அனுபவித்தவர்களும், சுவிசேஷம் கேட்டவர்களும் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசிக்க ஜெபிப்போம்.

## தெலங்கானா

### அடிலாபாத்:

**சந்தியாநாயக் & ரத்னம்மா**

**துதிக்க:** வடகம் கிராமத்து விசுவாசி சுவர்ணாவின் மகளுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவம் அருளினார். அநேக வருட ஜெபத்திற்குப்பிறகு ஜெய்னூர் ஆலய விசுவாசி எலிசாவின் சகோதரி சுவார்த்தாவுக்கு திருமணம் நடைபெற தேவன் உதவி செய்தார். மூன்று மாதங்களாக இருதய பிரச்சனையினால் அவதியுற்று வந்த இந்திரவல்லி சபை விசுவாசி சொர்ணாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள இந்திரவல்லி கிராமத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்கள் ஆலய ஆராதனையில் கிரமமாய் கலந்துகொள்ள; ஜெய்னூர் மற்றும் இந்திரவல்லி ஆலயங்களில் குழப்பத்தை ஏற்படுத்தி வரும் சில விசுவாசிகள் தேவனால் சந்திக்கப்பட; சபை வாலிபர்களுக்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அன்பையா P., திரு. அருண்குமார் G.
திரு. டேனியல் மார்வெல்ராஜ் D.

# ஆந்திரப் பிரதேசம்

## பலமநேர்:

### பால் குப்புசாமி & ஷைலா

**துதிக்க:** முசலமடுகு ஆலயத்தில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் 50 பேர் பங்குபெற்று பயன்பெற்றனர். பெட்டிகனேபள்ளி கிராமத்தில் தேவன் புதிய தொடர்பாளர்களைத் தந்துள்ளார். விசுவாசி கங்காதர் அப்பினபள்ளி ஆலயத்திற்கு இசைக் கருவிகளை வாங்கித் தந்துள்ளார். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்த ஐந்து குடும்பங்கள் மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹரி கிருஷ்ணா குடும்பம் மற்றும் கங்கன்னா குடும்பத்தினர் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; வெங்கட் ரமணா, சுப்பையா, அனிதா ஆகியோரின் குடும்பத்தினர் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; சி.வி. பள்ளி, பி.ஆர். கட்ரிகா ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; பிரிந்து வாழும் டேவிட் & ஸ்ரவாணி தம்பதியர் இணைந்து வாழ; தாலப்பள்ளி கிராம விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையில் தவறாமல் கலந்துகொள்ள; புற்றுநோயிலிருந்து ஜெயம்மா & ரூத்தம்மா, இரத்த சோகையிலிருந்து விஸ்வநாத், நீரிழிவு நோயிலிருந்து சுப்ரமணியம் & சுகுணம்மா, முதுமையினால் படுக்கையிலிருக்கும் மாரக்கா, பக்கவாதத்தினால் சரீரத்தின் ஒரு பகுதி செயல்படாமலிருக்கும் ராஜு ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## ரோத்தம்: தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** லிக்கித்தாவின் இரட்டை குழந்தைகளில் ஒன்று வயிற்றில் இறந்துவிட்டதால், அடுத்த குழந்தையையும், தாயையும் காப்பற்றுவது கடினம் என்று மருத்துவர்கள் கூறினார்கள். விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் கூடி அவளுக்காக பாரத்தோடு ஜெபிக்கவே தேவன் அவளையும், குழந்தையையும் அற்புதமாய் பாதுகாத்தார். தொற்றினால் பாதிக்கப்பட்ட மஞ்சுவின் பச்சிளம் குழந்தை ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றது. இரத்தத்தில் தொற்று ஏற்பட்டு அவதிப்பட்ட அக்ஷயாவின் மகனை தேவன் குணப்படுத்தினார். சுகவீனமான அருணாவின் ஆடுகள் ஜெபத்தின் மூலம் குணமாகின. மிஷனெரியை சாலை விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரக பிரச்சனையிலிருந்து ஸ்ரீனிவாஸ், கண் பார்வை பிரச்சனையிலிருந்து சப்ரிஷ், கால் எலும்பு முறிவிலிருந்து எலிசபெத்தம்மா, மஞ்சள் காமாலையிலிருந்து சித்தப்பா, மார்பக கட்டியிலிருந்து திவ்யா ஆகியோரை தேவன் குணப்படுத்த; சவிதாம்மா, ராஜசேகர், ராம்பாபு, அரவிந்த், சுவாதி, லக்ஷ்மியம்மா ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; ஐந்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் சுனிதாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; பணப் பிரச்சனையிலிருந்து ராஜப்பா குடும்பமும், குடியிலிருந்து ராஜு, ராமன்ஜி மற்றும் வேணுகோபால் விடுதலை பெற ஜெபிப்போம்.

உபவாச ஜெபநாள்

**31 டிசம்பர்**
புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சௌதரி ராஜேஷ் தாவ்லிபாய்
திரு. அனில் மஹாலி

## கொத்தச்செருவு:

### தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** உயர் இரத்த அழுத்தத்தினால் மிகவும் சுகவீனப்பட்டிருந்த லக்ஷ்மியம்மா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். விசுவாசி லக்ஷ்மி தேவம்மா வீட்டிற்குள் பாம்பு நுழைந்தபோது உதவியற்ற நிலையில் தேவனை நோக்கி ஜெபித்த போது பாம்பு திரும்பி செல்லும்படி தேவன் கிருபை செய்தார். ஒருவாரமாக காய்ச்சல் மற்றும் பக்கவாதத்தினால் அவதிப்பட்ட ஆஞ்சிநேயுலுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜய், தனுன்ஜய், பீட்டர் ஆகியோருக்கு தேவன் வேலை வாய்ப்பை அருள; வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள உபேந்திரா, நரசம்மா ஆகியோர் பூரண சுகம்பெற; ஜெபக் கூட்டத்தை நடத்தவிடாமல் தடைசெய்யும் லிங்காபகரி கிராம மக்கள் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; குடும்பப் பிரச்சனையினாலும், கிராமத்தினரின் எதிர்ப்பினாலும் விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள கங்காதரி மற்றும் நரசம்மா குடும்பத்தினரை தேவன் பெலப்படுத்த ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் நற்செய்தியை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நான்கு கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டது. ஜிக்காண்டபள்ளி ஆலயத்தில் முழு இரவு ஜெபத்தில் 30க்கும் அதிகமானோர் பங்குபெற்று ஜெபித்தனர். விசுவாசிகளை பலவிதமான வியாதிகளுக்கும், விபத்துகளுக்கும் விலக்கி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புளிகல், காவேரிபுரு, பேல்பட்டி, திம்மமன்தொட்டி, தேவன்தொட்டி, கௌரி பாளையம், பூஞ்சோலை, மஞ்சுகொண்ட ஹள்ளி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட; புற்றுநோயிலிருந்து தாம்தன் & தாராபாய், இருதயப் பிரச்சனையிலிருந்து சேகர், பாபு, தங்க குமார், செமிளா, காது மற்றும் முதுகெலும்பு பிரச்சனையிலிருந்து மோகனம்மா சுகம்பெற ஜெபிப்போம்.

## *யெகோவா ஷம்மா*

*உத்தரகாண்ட் மாநிலம், நானக்மட்டா பணித்தளத்தின் தெயோரி கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி குல்தீப் சிங் ரிக்ஷா ஓட்டி பிழைத்து வருபவர். ஒருநாள் இரவு 8 மணிக்கு அவர் வீடு திரும்பும் வழியில் ஒரு பெரிய புலி சாலையின் குறுக்கே நின்றுகொண்டிருந்தது. மிகுந்த பயத்துடன் இயேசுவே என்னை காப்பாற்றும் என்று ஜெபித்தபோது அவருக்கு எந்த சேதமும் ஏற்படுத்தாதபடி புலி காட்டிற்குள் சென்றுவிட்டது. தன்னை காப்பாற்றிய தேவனை துதித்துகொண்டே பத்திரமாக வீடு வந்து சேர்ந்தார் குல்தீப் சிங். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

413
மிஷனரி
ஆல்பம்



# திரு. ஹரிபாபு & திருமதி. பங்கஜம்

ஆந்திரப் பிரதேசம், பல்நாடு மாவட்டத்தின் கோகுலபாடு கிராமத்தில் மறைந்த திரு. சந்திரய்யா & திருமதி. அங்கம் மாவின் இளைய குமாரனாக 10.10.1980 அன்று திரு. ஹரிபாபு பிறந்தார். பிறவியிலிருந்தே தெளிவாக பேச முடியாமல் சிரமப்பட்டு வந்த இவர் மனசமாதானம் இழந்து காணப்பட்டார். கல்லூரியில் படிக்கும் போது இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட இவர் தேவனின் சமாதானத்தைப் பெற்று அனுபவித்தார். UESI ஊழியத்தின் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டு தனது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் சுவிசேஷம் அறிவித்து வந்தார். ஆதி. 12:1-4 & யாத். 3-4 மூலம் தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைப்பதாக நிச்சயித்துக்கொண்டார். 2005இல் குண்டூரில் நடைபெற்ற FMPB மாநில முகாமில் கலந்துகொண்டப்பின், இயக்கத்தில் தன்னார்வ ஊழியராக இணைந்து விரிவுப் பணியில் உதவி செய்து வந்தார். 13.06.2007இல் மிஷனெரியாக இணைந்து, ஊழிய பயிற்சி பெற்றப்பின் வட குஜராத்தில் லுசாடியா பணித்தளத்தில் ஊழியம் செய்து வந்தார்.

தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டத்தின் சிவந்திபுரம் கிராமத்தில் மறைந்த திரு. சுப்புராஜ் & மறைந்த திருமதி. ராஜம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக 13.05.1982 அன்று சகோதரி பங்கஜம் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் தாயை இழந்ததினால் மிகவும் துக்கத்தோடு வாழ்ந்தார். அண்டை வீட்டாரான திருமதி. பியூலா பொன்ராஜ் அவர்களின் மூலம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டப்பின் தேவ சமாதானமும் ஆறுதலும் பெற்றார். பின்நாட்களில் தேவ அழைப்பைப் பெற்றுக்கொண்ட இவர் 13.06.2007 அன்று FMPBயில் மிஷனெரியாக இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப் பின் சின்ச்பாடா சிறுவர் இல்லத்திலும் பின்னர் ஜாவ்டா பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். 24.09.2010 அன்று திரு. ஹரிபாபு & சகோதரி பங்கஜம் அவர்களின் திருமணம் நடைபெற்றது. அதன்பின் குடும்பமாக 2012 வரை லுசாடியா பணித்தளத்திலும், ஜாவ்டா பள்ளி மற்றும் பிப்பள்வாடா சிறுமியர் இல்லத்திலும் பணிசெய்தனர். தற்போது திரு. ஹரிபாபு ஜாவ்டா பள்ளியின் முதல்வராகவும், அவரது மனைவி ஜாவ்டா விடுதி பொறுப்பையும் ஏற்று ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு மகன்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தவன் ஐசக் ராஜா (11.11.2011) 9ஆம் வகுப்பும், இளையவன் ஜாண் மேத்யூ (22.01.2015) 6ஆம் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இவர்களது குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69



# உலகில் உதித்த உன்னத ஜோதி

அகிலம் காக்கும் அருட்பெருஞ்ஜோதி!
என்றும் ஒளிரும் ஆதி ஜோதி!
ஜகத்தின் இருள் அகற்றும்
தனிப்பெருஞ்ஜோதி!
பாவக் கறை நீக்கும் பரிசுத்த ஜோதி!
சாபம் நீக்கும் காருண்ய ஜோதி!
“நீ-நான்” நித்திய உயிர் பெற
மண்ணில் உதித்த விண்ணக ஜோதி!
அகத்தில் அறிந்தவர் பயம் போக்கும் விஜய ஜோதி!
இமைப்பொழுதும் நம்மை விட்டு விலகாத ஜீவ ஜோதி!
உத்தம வழி நடத்தும் சத்திய ஜோதி!
என்றும் நம்முள் வசிக்கும் பரம ஜோதி!

உருமாறா உன்னத ஜோதியை
உளம் கொண்டிடுவோம்,
நித்தியம் போற்றும் சத்திய வழி நடந்திடுவோம்,
உலகுக்கு உண்மை ஒளியாவோம்
உலகோர் இயேசுவை அறிந்திட
உன்னதருக்கு ஜீவ பலியாவோம்!

**– அருள்திரு. ஆல்பர்ட் பிரபாகரன்**

## இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***